# தென்றல்

நூலகம்

பதிவு இலக்கம் : 361910

காற்று : 05 சுகந்தம் : 17 (சித்திரை - ஆனி) 2012






## 5ஆவது ஆண்டில் தென்றல்!

வாசகர்கள் அனைவருக்கும் இனிய
தமிழ் - சிங்களப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

திருமதி.ஜெகதீஸ்வரி நாதன்
(கம்பிலுவில் ஜெகா)

65/=

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொழும்பு தமிழ்ச் சங்கம்




# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542
Email:- kirupabatticaloa@yahoo.com

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
திரு. வீ. கே. ரவீந்திரன்
திரு.இ.கோபாலபிள்ளை
திருமதி.கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம்.ஆ.அரசரெத்தினம்

**ஆலோசகர்**
இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

**ஓவியம்**
சி.டானியல்

**கணணி வடிவமைப்பு**
அ.ஜெயலக்ஸ்மி

**ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ–ர்)**


## 5ஆவது ஆண்டில் "தென்றல்"

உங்கள் அபிமான **"தென்றல்"** தேசிய பல்சுவை குடும்பச் சஞ்சிகை! இன்று (06.04.2012) இல் 5ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கிறது.

எம் வளர்ச்சிப் பாதையில் என்றும் துணை நிற்கும் எம் மேலான வாசகர்கள், விளம்பரதாரர்கள், ஊடக நிறுவனங்கள், கூட்டுறவுப் பணியாளர்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் உட்பட அனைவரையும் எண்ணிப் பார்ப்பதோடு மனதாரப் பாராட்டுகின்றோம்.

இந் நிலையில் கலாசார அலுவல்கள் திணைக்களகத்தினால் நடத்தப்பட்ட தேசிய இலக்கிய விழாவில் **"தென்றல்"** ஆசிரியர் பீட உறுப்பினர்களான கலாபூஷணம் ஆறுமுகம் அரசரெத்தினத்துக்கு திறந்த போட்டியில் விபரணத்துக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பரிசும், இ.கோபாலபிள்ளை திறந்த போட்டியில் கிராமிய கலைகளுக்காக இரண்டாம் பரிசும் பெற்றுள்ளனர்.

இவர்களோடு எமது தென்றலுக்கான **"மட்டு மாநில மண்மணத்தை திசை எட்டும் முட்ட எடுத்தோதும்....."** எனும் பாடலைப்பாடிய மாணவன் மகாலிங்கசிவம் புருஷோத்தமன் நேத்ரா தொலைக்காட்சி ராகமேடைப் போட்டியில் இறுதி ஆறு பேரில் தெரிவாகி தொடர்ந்து போட்டியிட்டு வருகிறார்.

இவர்கள் மூவரையும் **"தென்றல்"** மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறது! இவர்களால் **"தென்றல்"** பெருமை கொள்கிறது!

**என்றென்றும் அன்புடன்**

**-ஆசிரியர்-**

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

**அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.**

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.





உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும், தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

*- கலாபூஷணம், ஆறுமுகம், அரசரெத்தினம் -*

# பகுதி இரட்டித்துக் காலம் காட்டுதல்

உலகின் செம்மொழிகளுள் ஒன்றான தமிழ் மொழியின் வினைச்சொல் பற்றிக் கூறவந்த தொல்காப்பியர் **"வினையெனப்படுவது வேற்றுமை கொளாது, நினையுங்காலை காலமொடு தோன்றும்"** (தொல் - 683) என்றார். **"செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் ஆறும் தருவது வினையே"** (நன் - 320) என்று நன்னூலார் விரிவான விளக்கம் கூறினார். வேற்றுமை ஏற்காது, காலத்தைக் காட்டும் என்பவை வினைச்சொல்லின் வரைவிலக்கணம் எனலாம். வினைச்சொல் வேற்றுமை உருபேற்றால் அது வினையாலணையும் பெயராக மாறிவிடும்.

முன்னால் நிற்கும் ஒருவருக்குக் கட்டளையிடும் ஏவல் வினையடியிலிருந்து வினைச்சொல் பிறக்கும். இந்த சூக்குமத்தைப் புரிந்து கொண்டால் வினைச்சொல்லின் வினையடிகளை எளிதாகக் கண்டு கொள்ளலாம். படித்தான் (படி), ஓடினான் (ஓடு), கேட்டான் (கேள்), கண்டான் (காண்), வந்தான் (வா), சென்றான் (செல்), வென்றான் (வெல்), புக்கான் (புகு), கூவியது (கூவு), செத்தான் (சா) மேற்படி வினைச்சொற்களில் வினையடிகள் முன்னிலை ஏவல் வடிவங்களாக இருப்பதை உன்னிப்பாய் கவனியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்ற ஆறு கூறுகளில் ஒன்றோ பலவோ வினைச் சொல்லில் இடம் பெறலாம். வினைச்சொல்லைப் பிரித்து எழுதும் போது முதலில் நிற்பது **"பகுதி"** இறுதியில் நிற்பது **"விகுதி"** இடையில் நின்று காலங்காட்டுவது **"இடைநிலை".** இடைநிலைக்கும் விகுதிக்கும் மத்தியில் நிற்பது **"சாரியை".** பகுதிக்கும் இடைநிலைக்கும் நடுவில் நிற்பது **"சந்தி".** சந்தியாக வருமெழுத்து விகாரப்படுவது **"விகாரம்".** எனவே சொல்லைப் பிரிக்கும் போது 05 கூறுகளே வரும். **"நடந்தனன்"** என்ற சொல்லை நட+ த் +த் +அன் + அன் என்று பிரித்தெழுத வேண்டும். பகுதியாகிய **"நட"** இடைநிலையாகிய **"த்"** என்பவற்றுக்கு நடுவில் உள்ள **"த்"** என்ற சந்தி எழுத்து **"ந்"** என்ற விகார எழுத்தாகி **"நடந்தனன்"** எனப் புணரும்.

வினைச் சொல் இடைநிலையால் விகுதியால், விதிகளுக்குப் புறனடையால், பகுதி இரட்டிப்பதால் காலத்தைக் காட்டும். வினைச் சொற்கள் இடைநிலையால் காலம் காட்டுவதே பெருவழக்கு. த்,ட்,ற்,இன் என்பவை இறந்த காலத்தையும் கின்று, கிறு என்பவை நிகழ்காலத்தையும், ப்,வ் என்பவை எதிர்காலத்தையும் காட்டும் இடைநிலைகளாகும். சென்று, சென்றும் என்ற வினைச்சொற்கள் சென்றேன், சென்றேம் என பொருள் தரும் போது று, உம் என்ற விகுதிகள் இறந்தகாலம் காட்டின. வாழ்க, வாழிய, வாழியர் என்ற வியங்கோள் வினைகளில் க, இய, இயர் என்ற விகுதிகள் எதிர்காலம் காட்டின. என்றிசினோர் என்பதில் **"இசின்"** என்ற இடைநிலை இறந்த காலத்தைக் காட்டியது. என்பர் என்பதில் **"ம்"** என்ற இடைநிலையும் என்மனார் என்பதில் **"மன்"** என்ற இடைநிலையும் எதிர்காலம் காட்டின. இவை காலங்காட்டும் இடைநிலைகளுக்கு புறனடையான இடைநிலைகள்.

பகுதி இரட்டிப்பதால் காலங்காட்டும் வினைச்சொல் பற்றி நோக்குவோம். தமிழிலுள்ள வினையடிகள் அனைத்தும் பகுதி இரட்டித்து காலங்காட்டுவதில்லை. பகுதி இரட்டிக்கும் வினைச்சொற்களை கூர்ந்து கவனித்தால் பின்வருவனவற்றை அவதானிக்கலாம்.

1. பகுதி இரட்டிக்கும் வினையடி இரண்டு குறில் எழுத்துக்களால் (குறிலிணை) உருவானதாக இருக்கும்.





2. வினையடியின் இறுதி எழுத்து கு,டு,று என்ற மூன்று எழுத்துகளுள் ஒன்றினைக் கொண்டிருக்கும்.
3. இறந்த காலத்தைக் காட்டும் போது மட்டும் வினையடியின் இறுதியில் உள்ள உயிர்மெய் எழுத்தின் மெய்யெழுத்து இரட்டித்து இறந்த காலத்தைக் காட்டும்.
4. நிகழ்காலம், எதிர்காலம் என்பவற்றைக் காட்டும் போது பகுதி இரட்டிக்காது இயல்பாகவே சேரும். இவற்றுக்கான சில உதாரணங்களைக் காண்போம்.

**"நகு"** என்ற வினையடி **"நக்கான்"** (சிரித்தான்) எனப் பகுதி இரட்டித்து இறந்த காலம் காட்டும். **"புகு"** என்பது **"புக்கான்"** எனவரும். இவற்றில் **"கு"** என்ற உயிர்மெய் எழுத்திலுள்ள **"க்"** என்ற எழுத்து இரட்டித்துள்ளது. நகுகின்றான், நகுவான், புகுகின்றான், புகுவான் என நிகழ்கால எதிர்கால சொற்களில் பகுதி இயல்பாகவே உள்ளதைக் காண்க. அடு, இடு, சுடு, தொடு, நடு, படு, விடு என்ற வினைப்பகுதிகள் முறையே அட்டான், இட்டான், சுட்டான், தொட்டான், நட்டான், பட்டான், விட்டான் என பகுதி இரட்டிக்கும். இச் சொற்களில் **"டு"** என்ற இறுதி உயிர் மெய் எழுத்துப்பகுதி இரட்டித்துள்ளது. நிகழ்காலம் எதிர்காலத்தின் போது அடுகின்றான், அடுவான்; இடுகின்றான், இடுவான்; சுடுகின்றான், சுடுவான் என்றவாறு இயல்பாக அமையும். அறு, இறு, உறு, பெறு என்ற வினையடிகள் அற்றது, இற்றது, உற்றது, பெற்றது என இறந்தகாலம் காட்டும் போது, வினையடியின் இறுதியிலுள்ள **"று"** என்ற உயிர்மெய் எழுத்து இரட்டித்து இறந்தகாலம் காட்டிற்று, நிகழ்காலம், எதிர்காலம் என்பவற்றில் அறுகின்றது, அறும்; இறுகின்றது, இறும், உறுகின்றது, உறும் என வினையடி இயல்பாக உள்ளதைக் காணலாம். இனிக்கின்ற தமிழ் இலக்கணத்தை இனிப்பாகவே சுவைக்க இலக்கணம் படிப்போம்.

**எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்களிடமிருந்து**
**தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**
**அனுப்பிவைக்கப்படும் ஆக்கங்கள் புள்ஸ்கப் தாளில்**
**03 பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.**
**(ஆ–ர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்றலின் தேடல்

-க.கிருபாகரன்-

## திருமதி.ஜெகதீஸ்வரி நாதன்



கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பிலுவில் கிராமத்தில் பிறந்து கவிதை எழுதுவதில் காட்டிய ஆர்வம் காரணமாக பல்வேறு பரிமாணங்களில் தனது ஆற்றலை வெளிக்காட்டி வரும் திருமதி.ஜெகதீஸ்வரி நாதனை **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பேருவகையடைகிறது.

இவர் **"தம்பிலுவில் ஜெகா"** எனும் புனை பெயரில் கவிதைகளை எழுதி வருகிறார். தனது பன்னிரெண்டாவது வயதில் (1972) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் சிறுவர் மலர் நிகழ்ச்சியில் **"கோயில்மணி"** எனும் தலைப்பில் இவரது முதற்கவிதை ஒலிபரப்பானது.

இவற்றோடு நின்று விடாது இவரது கவிதைகள் இலங்கை வானொலியில் இளைஞர் மன்றம், வாலிப வட்டம், ஒலிமஞ்சரி, பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி போன்ற நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பாகின.

### பாடசாலைக் காலம்

தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்தில் மாணவர் மன்றங்களில் பல கவிதைகளை வாசித்து அதிபர், ஆசிரியர்களது பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். இவரது கவிதைத்துறை வளர்ச்சிக்கு இதே பாடசாலையில் கல்வி புகட்டிய சா.சக்திதாசன் (அக்கரைச்சக்தி) எனும் ஆசானே வழிகாட்டினார். பாடசாலை மட்ட கவிதைப் போட்டிகளில் இவரது கவிதைகள் பரிசில்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1980இல் தினகரன் வாரமஞ்சரியில் **"அன்னை"** எனும் முதல் கவிதை பிரசுரமானது. 1985இல் தம்பிலுவில் பொது நூலகத்தில் நூலக உதவியாளராகக் கடமையாற்றிய தம்பிலுவில் ஜெகாவின் கவிதைகள் பத்திரிகைகளில் பிரசுரமாகின. வாசிப்பில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த இவர் 1982ஆம்



கொழும்பு தமிழ்ச் சங்கம்



இலங்கையின் ஆற்றல் மிக்க – மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய, இசைத் துறைக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையிலேயே **"தென்றலின் தேடல்"** எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆண்டில் சாய்ந்த மருதில் இருந்து வெளியாகிய **"கோகுலம்"** எனும் சஞ்சிகையின் துணை ஆசிரியராகக் கடமையாற்றினார்.

எதிர்கால தலைவர்களான மாணவச் செல்வங்களுக்கு அறிவூட்ட வேண்டும் என்ற நோக்கோடு 1990ஆம் ஆண்டு கலைப்பட்டதாரியாக நியமனம் பெற்ற இவர் அக்காலப்பகுதியில் பாடசாலையில் இருந்து வெளிவந்த முத்தாரம், கலசம், செந்தாமரை, கரும்பு போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், உதவி ஆலோசகராகவும் பணிபுரிந்துள்ளார்.

### பெற்ற கௌரவங்கள்

✳ முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.திவ்வியநாதன், திருகோணமலைக் கவிராயர், பாவலர் பஸீல்காரியப்பர், இரா.நாகலிங்கம் (அன்புமணி), அக்கரைப்பாக்கியன், முத்துமீரான், அன்புடீன், பாலமுனைபாறூக், அக்கரை மாணிக்கம் ஆகியோரின் தலைமையில் பல கவியரங்குகளில் கலந்து கொண்டு தனது திறமையை வெளிக்கொணர்ந்துள்ளார்.

✳ 1993இல் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் **"கவிக்கோகிலம்"** எனும் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

✳ 1996இல் நடைபெற்ற திருக்கோவில் பிரதேச சாகித்திய விழாவின்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தொல்லியல் ஆய்வாளருமான க.தங்கேஸ்வரியால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

### கவிதைகள் வெளியான ஊடகங்கள்

● 2008 பங்குனி மாதம் வெளியான செங்கதிர் சஞ்சிகையிலும், 2010இல் வெளியான கவிஞன் ஆனி மாத இதழிலும் இம்மாதப் பிரபலமாக இவரது கவிப்பயணம் பிரசுரமானது

● பெண் எழுத்தாளர் எனும் வகையில் வானொலியிலும் இவரது பேட்டிகள் ஒலிபரப்பாகின. இந்த வகையில் வெளிச்சம் எவ்.எம்.இல்- முதல் மரியாதை, பிறை எவ்.எம்.இல் சந்திப்பு, ஊவா சமூக வானொலியில் பூவையர் பூங்கா போன்றவற்றில் இவரது பேட்டிகள் களங்கண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இவற்றோடு 2011.02.20 அன்று வெளியான தினகரன் வாரமஞ்சரி செந்தூரத்திலும், 2011.07.19 ஆந் திகதிய தினக்குரலிலும் இவரது பேட்டிகள் பிரசுரமாகின.

● 1998இல் இவரது **"இன்னும் விடியவில்லை"** (மூவர் தொகுதி) எனும் முதலாவது கவிதைத் தொகுப்பு அம்பாறை மாவட்ட தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டது. அத்தோடு கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியை திருமதி. சித்திரலேகா மௌனகுருவால் தொகுக்கப்பட்ட மட்டக்களப்பு சூரியா பெண்கள் அமைப்பு வெளியீடான கண்ணாடி முகங்கள் (2009), கவிதைகள் பேசட்டும்! (2010) ஆகிய கவிதைத் தொகுதிகளில் ஜெகாவின் கவிதைகள் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

● ஈழத்தில் வெளிவரும் ஞானம், செங்கதிர், ஜீவநதி, கதிரவன், கவிஞன், நீங்களும் எழுதலாம், பெண் போன்ற சஞ்சிகைகளில் ஜெகாவின் கவிதைகள் இன்றும் வெளிவந்து கொண்டிருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

இந்நிலையில் கலை, இலக்கியப் பரப்பில் ஓசை நயம்மிக்க மரபுக்கவிதையில் தன்னைப் பிணைத்துக் கொண்ட ஜெகாவின் புதுக்கவிதைத் தொகுதி வெளிவரவேண்டுமெனத் **"தென்றல்"** சஞ்சிகை எதிர்பார்க்கிறது.

## வாசகர் நெஞ்சம்

அரும்பணி உனது தமிழ்ப்பணி
அதற்கென இனியும் நீ அர்ப்பணி
பெரும்பணி உனது அறப்பணி
அறப்பணிதான் நீ செய்யும் இப்பணி
முப்பணி என்பது முதற்பணி
இப்பணி எல்லாமே உனது தமிழ்ப்பணி....
தமிழ்ப்பணி வாழ்கவே தாவில் புகழ்
தென்றல் வாழ்கவே!

பாரதி புத்திரன்
பாண்டிருப்பு.





# சங்கமன்கண்டி தொன்மை வரலாறு

- க. தங்கேஸ்வரி, பி.ஏ.(தொல்)சிறப்பு -

இக்கல்வெட்டுக்களின் விளக்கங்கள் டாக்டர் பரணவிதானாவின் inscription of ceylon எனும் நூலில் உள்ளன. இதற்கான விளக்கங்களையும் அவரே வாசித்து எழுதியுள்ளார். மேலே குறிப்பிட்டுள்ள கல்வெட்டுக்கள் அனைத்தும் கதிர்காமச் ஷத்திரியர் பற்றிக் கூறும் கல்வெட்டுக்களாகும்.

## ரோகணைப் பிரதேச பிராமிக் கல்வெட்டுக்கள் கூறும் விளக்கங்கள் :-

ரோகணைப்பிரதேசத்தின் மேற்குறிப்பிட்ட பல்வேறு இடங்களிலும் காணப்படும் கல்வெட்டுக்கள் கதிர்காம ஷத்திரியர்கள் ஆட்சிக்கு சான்று பகர்கின்றன.

இக்கல்வெட்டுக்களில் இடம் பெறும் "மஜி" மஜிமரஜ, தீச, அபய, உபராஜநாக, காமினி, தமரஜ முதலிய தமிழ்ப் பெயர்கள் இத் தமிழ் மன்னர்கள் ஆட்சியை மேலும் உறுதி செய்கின்றன. இப்பெயர்கள் அனுராதபுரகால மன்னர் பட்டியலிலும் இடம்பெறவில்லை என்பது மிகவும் முக்கியமானது.

ஆனால் இவர்களை மகாநாகனின் வழிவந்தோர் என சில வரலாற்றாசிரியர்கள் (பரணாவிதானா உட்பட) கூறுவது அபத்தமான கூற்றாகும்.

ராஜரட்டையிலும் ரோகணையிலும் பல்வேறு இடங்களிலும் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்களில் நாக, காமினி, திச, அபய, உதி முதலிய தமிழ்ப் பெயர்கள் பரவலாகக் காணப்படுகின்றன. சில சிங்களப் பெயர்கள் இவ்வாறான தமிழ் பெயர்களிலிருந்து பிறந்துள்ளன.

உதாரணமாக தீசன் என்னும் பெயர் தமிழ்மன்னனான மூத்தசிவனின் மகனது பெயராகும். இவன் பௌத்தத்தைத் தழுவிய பின் தேவநம்பிய தீசன் எனப்பெயர் பெற்றான். இவ்வாறே மகாராச, காமினிதிச என்ற விருதுப் பெயர்களாலும் அழைக்கப்பட்டான். அது போலவே துட்டகைமுனு (காமினி) சத்தாதிச முதலிய பெயர்களும்.

ரோகனை கல் வெட்டுக்களில் ரோகணைச் சிற்றரசர்கள் ரஜ உதி, உபராஜறாகன் முதலிய தமிழ் விருதுப் பெயர்களால் குறிப்பிடப்படுகின்றனர். ரோகன அரச பரம்பரையில் கதிர்காமச் ஷத்திரியர்கள் பத்துச் சகோதரர்கள் எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படுகிறது. மகாவம்சம் அவர்களை Dasa baraya Daruwan எனக் கூறுகிறது.

## மேலும் சில வரலாற்றுச் சான்றுகள்

தாதுவம்சம் என்னும் சிங்கள வரலாற்று நூலில் கதிர்காமச் ஷத்திரியர்களான பத்துச் சகோதரர்களையும், மகாநாகனின் பேரனான கோதாபயன் கொலை செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை போவத்தகல கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. கொலை செய்தபின் அப்பாவத்தைப் போக்க பல விகாரைகளைக் கட்டியதாக **"அட்டகதா"** என்னும் சிங்கள நூல் கூறுகிறது.

தேவநம்பிய தீசனின் வெள்ளரசு மரக்கிளை நாட்டும் விழாவிற்கு கதிர்காமச் க்ஷத்திரியர்களையும், சிற்றரசர்களையும், சந்தண காம பிரபுக்களையும், அழைத்தான் என மகாவம்சம் கூறுகின்றது. இவர்கள் மகாவி காரையில் கூடினர். எனவும் அரசமரக்கிளையானது தீவின் பல இடங்களிலும் ஜம்புகோளப் பட்டினம், ஸ்சரசமணராம, பட்டமா சேத்தியம், கஜரகம போன்ற இடங்களில் நடப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

நாகர்கள் வாழ்ந்ததும் பெருங்கற்கால பண்பாடு நிலவியது மான உகந்தை, சங்கமான்கண்டி, திருக்கோவில் போன்ற இடங்கள் நாகர்கள் வாழ்ந்த இடங்களாகும். இவைகள் பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படும் இடங்களுமாம்.

சங்கமான் கண்டியில் மேலும் இரு கல்வெட்டுக்கள் காணப்பட்டதாகவும் அவை தெளிவின்றி இருப்பதாகவும் பரண விதான குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டார் குறிப்புகள், வரலாற்றுத் தகவல்கள்

டொலமி (*ptolemy*) என்பவன் கி.மு 144ல் உலகெங்கும் விஜயம் செய்த ஒரு கிரேக்க புவியியல் அறிஞன். இவன் வரைந்த இலங்கைப் படத்தில் கி.மு 144ல் இலங்கையின் இடங்கள் காட்டப்பட்டுள்ளன. இதில் கரையோரம் முழுவதும் கோயில்களின் படங்களுடன் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இப்படத்தில் தெற்கே டொன்ரா *(Dagana)* என தேவாந்திர முனை காட்டப்பட்டுள்ளது தென்கிழக்கு முனையாக ***"Bacbi cinitas"*** என்ற பெயருடன் கோயில்களின் படமும் *Cetau promont* என்ற முனையையும் காட்டியுள்ளான். அதற்கு சிறிது மேலே *Nanigiri* எனக் காட்டியுள்ளார். இவை *Cetaupromont*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்பது சங்கமன் கண்டி முனையையும், மேலே உள்ள கோயில்கள் அக்காலத்தில் இருந்த தான்தோன்றீஸ்வரம், திருக்கோவில் போன்ற பழமையான கோயில்களையும் குறிப்பாக கருத முடியும்.

டொகனா(*Dagana*) கோயிலானது சந்திரனுக்குரிய (*Sacre Luna*) கோயில் எனவும் ஆயிரம் பிராமணர்கள் இருந்து யாகம் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இது டொன்ராவில் இருந்த சந்திர மௌலீஸ்வரர் கோயில் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஆகவே சங்கமன்கண்டி முனையும், அங்கிருந்த கோயிலும் கி.மு 140ல் புகழ்பெற்றிருந்தது என்பதற்கு டொலமியின் வரைபடம் முக்கிய சான்றாகிறது. மேலும் இவனது இந்த வரைபடத்தில் குமணை ***" Bacani"*** எனவும், உரோகணம் ***"Rhogandani"*** எனவும் கோடிட்டு காட்டியுள்ளான். எனவே கி.மு 140ல் சங்கமன்கண்டியும், அதனைச் சூழவுள்ள பிரதேசங்களும் முக்கியம் வாய்ந்த இடங்களாக இருந்துள்ளன என்பது தெளிவாகிறது.

## சங்கமான் கண்டி இடிபாடுகள்

சங்கமான்கண்டிப் பிள்ளையார் ஆலயத்திற்கு சுமார் நூறு யார் தூரத்தில் கோயிலுக்குரிய இரண்டு வற்றாத கிணறுகள் உள்ளன. இவை எக்காலத்திலும் வற்றாதவை என இப்பகுதி மக்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இதனூடே கோயிலின் பின் புறக் காட்டினுள் சென்றால் அங்கு சுமார் ஆறு, ஏழு மைல் பரப்பிலே பல விதமான இடிபாடுகள் விரவிக்கிடக்கின்றதைக் காண முடியும். இவை கருங்கல் கட்டிட இடிபாடுகளாகும். இவ் இடிபாடுகள் ஒரு அரண்மனை இடிபாடுகள் என தெரிகிறது.

## சுற்றுமதில் பிரதேசம்

மிகப் பரந்த ஒரு இடத்தைச் சுற்றி மதில் அமைப்பு காணப்படுகிறது. கிழக்கு, மேற்குப்புறம், வாயில் (*gate*) அமைப்புக்கள் நன்றாகவே புலனாகின்றன. சங்கமன்கண்டிப் பிள்ளையார் கோயிலின் பின்புறமாக செல்லுமிடத்து, இம்மேற்கு வாயிலினூடாகவே இக் கட்டிடப்பகுதிக்குள் உட் செல்ல முடிகிறது. நிச்சயமாக இவை ஒரு அரண்மனை இடிபாட்டின் தோற்றம் என்பதை பின்வரும் அமைப்புக்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

தமிழ்ச் சங்கம்



நூலகம்

## நாகவழிபாட்டுத் தடயம்

இம் மேற்கு வாயிலின் ஊடே செல்லும்போது முதலில் தென்படுவது நாகவழி பாட்டுக் குரிய ஓரிடமாகும். புதர் மண்டிக் கிடக்கும் சுற்றாடலில் ஒரு சிறிய கோயிலின் அளவில் காவடி வடிவில் செதுக்கப்பட்ட சுற்று மதில் அமைப்பு அழிவுற்ற நிலையில் தென்படுவதை அவதானிக்க முடியும். ஆரம்ப காலங்களில் ஈழத்தின் வடக்கு, கிழக்கு, தெற்கு கரையோரம் முழுக்க நாகர்கள் வாழ்ந்ததும், கதிர்காம ஷத்திரியர்கள் நாக தொடர்பு உடையவர்கள் என்பதும் ஆய்வுகள் காட்டுகின்றதையும் நோக்கினால் இந்த உண்மை புலனாகும்.

## அழகிய குளம்

நாகர் கோயில் எனக்கருதப்படும் இவ்விடத்திலிருந்து சிலயார் தூரத்தில் பெரியகுளம் ஒன்று அமையப்பெற்றுள்ளது. இக்குளம் மிக ஆழமானதென இம் மக்கள் கூறுகின்றனர். சுற்றிவர நாவல் முதலிய காட்டு மரங்கள், செடி, கொடிகள் நிரம்பிய இயற்கை எழிலோடு மறைக்கப்பட்ட நிலையிலே இக்குளம் காட்சியளிக்கிறது. யானைகள் கூட்டங் கூட்டமாக வந்து இந்த குளத்திலே நீர் அருந்திச் செல்வதுண்டாம். அதற்குரிய அடையாளங்களும் காணப்பட்டன. மேலும் இதற்குள் பிரவேசிப்பவர்கள் திக்குத்திசை தெரியாமல் தடுமாறுவ துண்டாம் எனவும் ஒரு ஐதீகம் நிலவுகிறது. உண்மையிலேயே இச் சூழலைப் பார்க்கும் போது நச்சுப் பொய்கையை நினைவூட்டுவதாகவே அமைகின்றது.

## பாறை உச்சியில் காணப்படும் இடிபாடுகள்

பரந்ததொரு பாறையின் உச்சியிலே பெரியதொரு அத்திவாரத்தின் இடி பாடுகள் விரவிக்கிடக்கின்றன. இது ஓர் அரண்மனையின் அத்திவாரம் என்பது இங்கு மிகவும் அழிவுற்ற நிலையில் காணப்படும் இடிபாடுகள் மூலம் உணர முடிகிறது. முன் வாயில் படிகள் வரிசையாக அமைந்துள்ளன. இப்படிகள் சுமார் 12 அடி அல்லது 14 அடி நீளமானதாகவும் ஒரு அடிக்குமேல் அகலமுள்ளதாகவும் காணப் படுகின்றன. இப்படிகள் தொடங்கும் இடத்தில் கைப்பிடிச் சுவர்கள் *(Balus trade)* மிகப் பெரிய அளவினதாக அமைந்துள்ளன.

கட்டிடக் கலையின் ஆரம்பமான அனுராதபுரக்காலத்திலும், அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் கல்லின் அளவு சிறியதாகிறது. ஆனால் இக் கைப்பிடிச் சுவர் கல்லின் அளவு மிகப் பெரியது. மேலும் அரை வட்டமாகவும் நீள்சதுர





வடிவுடனும் மிகப் பெரிய அளவில் அமைந்துள்ளது. இதில் சிற்ப வேலைகள் இருந்திருக்க வேண்டும். காலவோட்டத்தில் அழிவுற்று தேய்ந்து போயிருக்கலாம்.

## கற்தூண்கள், கற்சலாகைகள், பிற எச்சங்கள்

இவ்விடத்தில் நாற்புறமும் கற்தூண்கள் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. அக்கற்தூண்கள் நடப்பட்டிருந்த குழிகள் உருண்டையான உரல்வடிவில் அனேகம் காணப்படுகின்றன. தூண்கள் நாற்சதுர வடிவுடையன. இத்தூண்கள் நடப்படும் குழிகள் மேற்படி சதுரத்தூண்கள் பொருந்தும் வகையில் சதுரமாகப் பொழியப்பட்டுள்ளன. இவைகள் மரத்தூண்கள் மரச் சலாகைகள் பொருந்தும் விதத்திலே வெட்டப்பட்டுள்ளன.

## சந்திர வட்டக் கற்கள்

அரண்மனை என்று கருதப்படும் இடத்தின் வாயிற் படியுடன் முன்னே கூறப்பட்ட இரு கைப்பிடிச்சுவரின் நடுவில் மேற்படி சந்திரவட்டக்கல் காணப்ப டுகின்றது. இது மிகவும் பெரியதாகவும். சிற்ப அலங்காரத்துடனும் அமைந் துள்ளது எனலாம். இதன் ஓரங்களில் கொடி அலங்கார அமைப்புக்கள் தென்படுவதை அவதானிக்கலாம். ஆனால் நூற்றுக்கணக்கான வருடங்கள் மழை, வெயில் போன்ற இயற்கை அழிவுகளால் அலங்காரங்கள் அழிவுற்றுள்ளன.

**- தொடரும் -**

### மீளாத் தூக்கம்

- ப.கஸ்தூரி -

கல்லறைக் காட்சிகள்
வெறும் வேண்டுதலும் வேதனையும்
முடிவுகள் முற்றுப் புள்ளியை எதிர்பார்த்து
ஆத்மாக்களின் உறக்கமது
அங்கு கனவுகள் மட்டுமே!
நினைவுகள் மட்டும் செப்பேடுகள்
நிசப்த வேளை நிழலாகிய உறவுகள்
முற்றுப் புள்ளியை எதிர்பார்த்து
நானும் ஓர் ஆன்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீலாபாலன் -

# அழியாத சொத்து

கற்றிடு கற்றிடு கற்றிடு தம்பி
கல்வி உன்னையே கனமாக்கும்
கற்றலால் மேன்மை பெற்றவர் அதிகம்,
வரலாறு இதனை நிரூபிக்கும்
மற்றவை யென்று இங்குள்ள எல்லா
மசாலாவும் உன்னைப் பழுதாக்கும்
கற்றிடு.... உன்னைப் பக்குவப் படுத்தும்
கல்வியைத் தொடர..... முற்படு நீ

இளமையிற் கல்வி சிலையில் எழுத்தாய்
இருக்கும் என்றார் எம் முன்னோர்கள்
இளமையில் கல், அக் கல்வி உன் வாழ்வைச்
சிகரத்திற் குயர்த்தப் படி அமைக்கும்.
பழுதாகி மனிதன் சிதைந்திடக் காரணம்,
பக்குவப் படுத்திடும் கல்வி இன்மை.
இளமையிற் கல்
அக்கல்வியைக் கொண்டே
இனியொரு வரலாறு எழுதலாம் வா.

கணிதமும்... வணிகமும்...
வாழ்க்கை முறையினைக்
கற்றுத் தருகிற பாடங்கள்
சமூகவியல்.....
மண்ணில் மனித உறவினைப்
பதிய மிடுகிற தத்துவங்கள்.
இனிஒரு விதி இது என ஒரு புதுவிதி
எழுதிட உதவிடும் கல்வியொன்றே.
அதனையே தொடர்ந்திட
முயலுதம்பி!
கல்வி
அழியாத சொத்து
அதனைத் தொடர்ந்து செல் நீ.







# தென்றலின் உருவாக்கத்திற்கு உயிரூட்டிய வீ.சு.கதிர்காமத்தம்பி

-கீரன்-

மட்டக்களப்பிலிருந்து ஒரு சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவரவேண்டும் என்ற நோக்கோடு **"தென்றல்"** இதழுக்கான அத்திவாரத்தை இடுவதற்கு துணைநின்ற மூத்த ஊடகவியலாளர் அமரர். வீ.சு.கதிர்காமத்தம்பியை இவ் இதழில் **"நீத்தார் நினைவு"** ஊடாக வெளிக்கொணர்கிறேன்.

அமரர்.வீ.சு.கதிர்காமத்தம்பி **"வீரகேசரி"** நாளிதழின் உதவி ஆசிரியராகவும் சுழற்சி நிருபர் என நியமிக்கப்பட்ட ஒரே ஒருவராகவும் செயற்பட்டு எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்தார்.

அத்தோடு மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த **"விடிவானம்"** பத்திரிகையின் ஆசிரியராகவும், **"தினக்கதிர்"** நாளிதழின் ஸ்தாபக ஆசிரியராகவும் பணிபுரிந்ததையும் யாரும் மறுதலிக்கமுடியாது.

இவரின் திறமையைக் கண்ணாரக் கண்டு கொண்ட மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை அன்னாருக்கு **"தேனகக் கலைச்சுடர்"** விருது வழங்கிக் கௌரவித்தது.

இவரின் இழப்பு அன்னாரின் குடும்பத்தினருக்கு மட்டுமன்றி தென்றலுக்கும் பேரிழப்பாக அமைந்தது.

இவ்வேளையில் அமரர்.வீ.சு.கதிர்காமத்தம்பிக்குத் **"தென்றல்"** தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமத்தம்பி காலமெல்லாம் வாழ்வான்!

- கவிஞர் செ.குணரத்தினம் -



கட்டித்தயிரோடு கனிந்த பழம், பால்தேனும்
கொட்டிப் பிசைந்து கொடும் பசிக்குத் தீனியாக
கொடுப்பதைப்போல் நல்ல பல செய்திகளை நாளிதழில்
கடுகதியில் வரப்பண்ணும் கதிர்காமத் தம்பியைப்போல்
இனிமேல் தான் பிள்ளை பிறக்கவேண்டும் இந்த மண்ணில்!
துணிச்சல்மிக்க செய்தியாளன், துறைபோன தமிழ்ப்பேச்சாளன்
வீரகேசரி என்னும் பண்ணையிலே வளர்ந்து, பின்பு
வீரகேசரியின் உதவியாசிரியனாக உயர்ந்து நின்ற
விண்ணாதி விண்ணன் வீ . சு. கதிர்காமத்தம்பி
கண்முன்னால் இப்போதும் காட்சி தருவதென்ன?
இன்னுமவன் எம்முடன் தான் இருக்கின்றான் என்பதனை
இன்றெமக்கு எடுத்துக்காட்டும் இவன்புகழோர் அதிசயமே!

பத்திரிகை ஜாம்பவான் எஸ்.டி.எஸ் ஐயா போல
வித்தாகி கிழக்கு மண்ணில் வளர்ந்தபெரும் அழியாச்செல்வம்

**'கொண்டல்', 'விடிவானம்', 'தினக்கதிர்', தமிழ்அலை'**
எனும் கிழக்குப் பதிப்புகளில் வீ–சு–க
பிரதம ஆசிரியர்ப் பொறுப்பையேற்று, வெற்றியுடன்
வரவைத்த திறமையாளன் வாய்மையுள்ள நேர்மையாளன்
கல்லடியில் வாழ்ந்த காயத்ரி சித்தரோடு தொடர்புவைத்து
நல்மதிப்பைப் பெற்ற நண்பனிவன்; நானும் இவனும்
ஒன்றாகவே படித்த உயரிய காலங்களை
இன்றெண்ணிப் பார்த்தாலும் இனிக்கத்தான் செய்கிறது.
ஆயிரம் கவலை நெஞ்சை அமுத்திப்பிடித்தாலும்
வாய்விட்டு அவற்றைச் சொல்லி வருத்தப்படமாட்டான்
தானும் தன் பாடுமென்று தன்வழியே நடந்து போவான்
ஆனானப் பட்டோருக்கும் அவன் தலை சாய்க்கமாட்டான்
தெருவோரம் அமர்ந்திருக்கும் தெய்வங்கள் எதுவானாலும்
சிறுநேரம் நின்று ஆங்கே கும்பிடு போட்ட பின் தான்
தொடருவான் தன் நடையை; எப்போதும் இவனுடைய
நடையிலே மிடுக்கிருக்கும்; சேட்பைக்குள் சின்னதான
திருக்குள் நூலிருக்கும் சிந்தையில் தெளிவிருக்கும்
கதிரவெளிக் கிராமத்தில் கருவாகி உருவெடுத்த
கதிர்காமத் தம்பிக்குக் காலமெல்லாம் புகழிருக்கும்
எதிரியும் தலைவணங்கும் இவன் படைப்போர் தனிப்படைப்பே!





-வனா-

கொழும்பு தமிழ்ச் சங்கம்

# நிஜங்களின் வலி



கண்கள் குளமாக அந்தப்பெயர்ப் பலகையையே அண்ணார் ந்து பார்த்துக் கொண்டிருந்தார் பரமானந்தம். **"யாழ்ப் பாணம் தேசிய கல்வி யியற் கல்லூரி"** என்ற அந்த எழுத் துக் கள் வெள்ளி யாய் மின்னிக் கொண் டிருக்க அதிலிருந்து பார் வையை அகற் றாமலேயே அவர் நின்று கொண்டி ருந்தார்.

இன்னும் இரண்டு வருடத் திற்கு எனக் கும் என் மகள் தர்சினிக்கும் இடையே இந்தப் பிர மாண்டமான நிறுவனம் சுவராக நிற்கப் போகிறது என அவர் மனம் எண்ணிக் கொண்டது. ஆயினும் **"சே சே என்ன இது. அவளது உயர்ச்சி இங்கல்லவா தங்கி நிற்கிறது. பின் ஏன் இப்படி நான் நினைக்கவேண்டும்."** என்று தன் மனதையே அவர் கடிந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாண்டிற்காகத் தமது பிள்ளைகளை அக் கல்லூரிக்கு அழைத்து வந்திருந்த பெற்றோர் தம் கடமை முடிந்து தம் ஆதங்கங்களை வார்த்தைகளாகக் கொட்டியபடி ஒவ்வொருவராக அவரைக் கடந்து சென்றுகொண்டிருந்தார்கள்.

**"என்ட பிள்ளைக்கு சாறியும் கட்டத் தெரியா, என்ன செய்யப்போறாளோ?"** இது ஒரு தாயின் பரிதவிப்பு.

**"வீட்டில எண்டா ஒரு நிமிஷமும் நிக்கமாட்டான். காலில சக்கரத்தக் கட்டினவன் மாதிரி அந்த மோட்டசைக்கிளில ஊரச்சுத்துறது தான் வேல. இப்ப தான் அந்தச் சைக்கிளுக்கு ஆறுதல். ரெண்டு வரிசத்துக்கு நல்ல பழக்கத்தை யெண்டாலும் பழகிட்டுவரட்டும்."** இது ஒரு தகப்பனின் குமுறல்.

ஒவ்வொருவரும் தத்தமது பிள்ளைகளைப் பற்றிப் பேசியபடி போய்க்கொண்டிருந்தார்கள்.

வாசலின் ஆரவாரம் அடங்கியபின்னரும் வீடுதிரும்பும் எண்ணம் பரமானந்தருக்குவரவில்லை. தன் ஒரே மகளை இங்கு கொண்டு வந்துவிட்டு அவர் தனியாளாக நிற்கிறார். அவரும் மகளும் மட்டுமே வாழ்ந்து வந்த வீட்டிற்குத் தனியாகத் திரும்பிச் செல்ல அவருக்கு மனம் வரவில்லை. வீட்டின் வெறுமையை நினைக்ககண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. அங்குள்ள சூழலில் தனிமையின் கொடுமை எவ்வளவு பாரதூரமானது என்பதை கடந்தகால அனுபவம் அவருக்குக் கற்றுத் தந்திருந்தது. கிட்டத்தட்ட மனநோயாளியாகும்.நிலையிலிருந்து மீள வேண்டியதற்கான ஆயத்தத்தை இப்பொழுதே மேற்கொள்ளவேண்டுமோ என்ற அச்சம் அவரை அலைக்கழித்தது.

பிரியும் போது தர்மினி கண்கலங்கியபடி சொன்னவார்த்தைகள் காதில் ஒலித்தன.

**"வீட்டில தனியா என்ன செய்வீங்க அப்பா? உங்களுக்கு தேத் தண்ணியும் போடத் தெரியாதே? அக்கம் பக்கத்தில ஆக்களும் உறவுகளும் இல்லையே அப்பா? எப்பிடிக் கஷ்டப்படப் போறீங்களோ?"**

மகளுக்குரிய பாசத்தோடும், ஏக்கத்தோடும் அவள் கேட்டதற்குதன் ஆற்றாமையை மறைத்துக் கொண்டு அவர் சொன்னார்.

**"அத நான் பார்த்துக் கொள்ளுவன் மகள். உன்ட வாழ்க்கைக்கு இது அத்திவாரம். உன்ட வாழ்க்கைதான் எனக்கு இப்பமுக்கியம். உன்ட அம்மாட கடைசி ஆசையும் நீ படிச்சி நல்ல நிலைக்கு வரோணும் என்டது தான். கவலைப்படாமல் படி. அப்பாவைப் பற்றி யோசியாத."**

சொல்லிவிட்டு நூறுயார் கடக்க முன்பே **"என்ன செய்யப் போகிறேன்?"** என்ற பயம் அவரைத் தொற்றிக்கொண்டது.

கடந்த காலங்கள் நினைவுக்கு வந்தன.





வாழைத்தோட்டங்களுக்குப் பெயர் போனநீர்வேலி அவருடைய ஊர். கச்சேரியில் அவர் உத்தியோகத்தராகப் பணிபுரிந்தார். அத் தொழில் கௌரவத்திற்கானது மட்டுமே. மற்றும்படி தோட்டம் அவரை செல்வந்தராக உயர்த்தி வைத்திருந்தது. ஒரே மகள் தர்சினியோடும் மனைவி கௌசல்யாவோடும் ஊர் புகழ அவர் வாழ்ந்தார். அவரது நாற்சார் வீடு அனைவரையும் அரவணைக்கும் அன்பு இல்லமாக இருந்தது. அவரது பெற்றோர், சகோதரன் குடும்பம், கௌசல்யாவின் பெற்றோர், அவளது ஒரேயொரு சகோதரியின் குடும்பம் என கூட்டுக் குடும்பமாக அவர்கள் வாழ்ந்திருந்தார்கள். யுத்த அரக்கனின் இடைவிடாத துரத்துதல்களுக்குள் அவர் குடும்பமும் விதிவிலக்கின்றி மாட்டிக் கொண்டது. இடப்பெயர்வு.... இடப்பெயர்வு.... என்று இடப்பெயர்வுகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போனதால் குடும்ப உறவுகளும் தனித்தனியாக பிரியும் நிலையும் தவிர்க்க முடியாததாயிற்று.

பாதுகாப்புத் தேடி ஒரு ஊரிலிருந்த மக்கள் இன்னுமொரு ஊருக்குப் போகும் போது வேறொரு ஊரிலிருந்த மக்கள் இந்த வெற்றிடத்திற்கு வருகின்ற **"இருக்கும் இடத்திலிருந்து வெளியேறுவதுதான் பாதுகாப்பிற்கான வழி"** என்ற பொதுவான நம்பிக்கையில் மக்கள் தம் மனங்களை சாந்தப்படுத்திக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைக்குள் ஏனையோரைப் போலவே அவரும் தள்ளப்பட்டிருந்தார். முகமறியா ஊர்கள் அவர்களையும் ஏற்றுக்கொண்டன. உறவுகள் திக்குக்கு ஒன்றாக சிதறிப்போயின.

ஓடிக் களைத்து எந்த எல்லைக்கோட்டையும் தொடமுடியாதவர்களாய் தோற்றுப் போய் மூவரும் ஊர் திரும்பியபோது தர்மினி க.பொ.த. உ/தரத்திற்கு வந்திருந்தாள். நிம்மதி மூச்சுடன் தர்மினியின் கல்வியை மையப்படுத்தி மூவரும் ஆசுவாசப்படுத்தியபோது தான் மீளமுடியாத ஒரு சோதனை அந்தக் குடும்பத்திற்கு பேரிடியாய் வந்தது.

காய்ச்சலுக்காக வைத்தியசாலைக்குச் சென்ற கௌசல்யாவிற்கு இரத்தப்புற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பரமானந்தம் நிலைகுலைந்து போனார். தர்மினிக்கு பரீட்சைக்கு இன்னும் மூன்று மாதங்களே இருந்தன. அதுவரை காலன் கௌசல்யாவைக் காத்திருக்கவிடவில்லை. தந்தையும் மகளும் தனித்துப் போனார்கள்.

கௌசல்யாவின் இறுதிக் கணங்கள் கொடுமையானவை. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையிலும் தர்மினியிடம் அவள் சொன்ன வார்த்தைகள் உறுதியுடன் வெளிப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மகள். அம்மா போயிட்டன் எண்டு படிப்பைவிட்டுவிடாதே. அம்மாட விருப்பம் நீநல்லாப் படிச்சு கம்பஸ்"க்குப் போக வேணும் எண்டது தான். ஒரு தரம் தவறினாலும் அடுத்த முறையும் நல்லாப் படிச்சு பரீட்சை எழுது. மனம் தளர்ந்து போகாதே. படிப்புத்தான் முக்கியம். படிச்சாத்தான் இந்தக் காலம் வேலைபார்க்கலாம். பொம்பிளைக்கு இப்பவேலை முக்கியம். படிச்சாவேலை எடுத்துப் போடலாம். நீ உன்ட கால்ல நிக்கோனும். படி, படி, அப்பாவைப் பார்த்துக்கொள்."**

படிப்பு, வேலை என்ற அம்மாவின் வார்த்தைகளை வேதவாக்காகக் கொண்டு தர்மினி படித்தாள். அதன் பயனாக அத்தனை சோதனைகளுக்கு மத்தியிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுபல்கலைக்கழகத்திற்குத் தகுதிபெற்றிருந்தாள். எனினும் கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பித்தபோது அதுவும் அவளுக்குக் கிடைத்திருந்தது.

**"அப்பா என்ன செய்ய?"** என்று கேட்ட போது பரமானந்தம் **"அம்மாட விருப்பம் நீ கம்பஸ்"க்குப் போக வேணுமெண்டது. நீமுடிவெடு."** என்றார்.

**"அப்பா, அம்மா முக்கியமான விருப்பம் படிச்சு நான் உத்தியோகம் பார்க்க வேணுமெண்டதுதான். கம்பஸ்"க்குப் போனா குறைஞ்சது நாலைஞ்சு வருஷமாகும். முடிந்து வந்த உடனேயும் வேல கிடைக்காது. அதுக்கும் வருஷக் கணக்கில காத்திருக்கோனும். உங்களுக்கும் நெடுகசுமையா இருக்க நான் விரும்பல்ல அப்பா. அதனால படிப்பும் வேலையுமா நான் கொலிஜ்ஜ"க்குப் போகப்போறன். அம்மா இருந்திருந்தாலும் இதையே விரும்புவா. வெளிவாரியில பட்டப்படிப்பை முடிக்கலாம் அப்பா. என்னப்பா சொல்றீங்கள்."**

மகள் கூறுவதிலும் நியாயம் இருப்பதை உணர்ந்த பரமானந்தம் அவளது விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கவில்லை. அதனால் இப்போது இங்கு வந்து நிற்கிறார்.

**"மகள் படிச்சு உத்தியோகம் பாக்கவேணுமெண்டு ஆசைப்பட்டியே கௌசல்யா, இப்ப மகளுக்கு முருகன் துணையால படிப்போட வேல கிடைச்சிருக்கு. உன்ட ஆச நிறைவேறிற்று. இதப் பாக்க நீ உயிரோட இல்லையே கௌசல்யா."**

மனதுக்குள் குமைந்து கொண்டிருந்த பரமானந்தரை **"ஐயா, இன்னும் போகேல்லியே"** என்ற காவலாளியின் குரல் நிஜத்திற்கு அழைத்து வந்தது. நீண்டபெருமூச்சுடன் அவரது கால்கள் தனிமையைத் தேடி பயணிக்கத் தொடங்கின.





# மாணவர்களே! சிறுகதை எழுதுவோம் வாருங்கள்!

- பேராசிரியர். செ.யோகராசா -

சிறுகதையின் ஆக்கக் கூறுகளுக்குள் முக்கியமானதொன்றாக இருப்பதும், அதே வேளையில் அதற்குரிய முக்கியத்துவம் உணரப் படாதிருப்பதுமாகிய ஒன்றாக உள்ளது **"நடை"** ***(Style)*** ஆகும். **"நடை"** என்றவுடன் பலரும் எடுத்துரைக்குமொன்று அதன் எளிமைப் பண்பு பற்றியதேயாகும். அவ்வாறு கருதி வருவதனால் ஏற்பட்டுள்ள விபரீதங்களில் ஒன்று ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்கள் பலரும் சிறுகதையின் **"நடை"**க்கு உரிய இடத்தினை வழங்காது விட்டமையாகும். இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலில் இளம் எழுத்தாளர்கள் அது பற்றி அறிந்திருக்க வேண்டியதன் அவசியம் இருமடங்காகிவிடுகிறது.

**"நடை"** என்பதை சிலர் மொழிநடை எனவும் கூறுவர். **"நடை"**யின் அடிப்படை மொழி சார்ந்திருப்பதனால் அவ்வாறு கூறுவதில் தவறில்லை. குறிப்பாகச் சொன்னால் மொழியின் அடிப்படை அம்சமாகிய உரை நடை அல்லது வசன நடையோடு நாம் கவனிக்கின்ற **"நடை"** என்பது தொடர்புபட்டுள்ளது.

மேற் கூறியவற்றை விளக்கமாக அவதானிப்பதற்கு முன்னர் சிறுகதையில் **"நடை"**யின் முக்கியத்துவம் பற்றி அறியவேண்டியது அவசியமாகும். ஆழ்ந்து நோக்கும் போது ஒரு சிறுகதையின் தனித்துவ அம்சங்கள் வெளிப்படும் விடயங்களுள் தலையாயதொன்றாக **"நடை"** காணப்படுகிறது. ஏனெனில் எழுத்தாளுமையுள்ள ஒவ்வொரு எழுத்தாளரும் கதை சொல்லும் விதத்தில் தனது திறமையைக் காட்டுகிறார்கள்.

**"நடை"** என்பது எழத்தாளர் தமது கருத்தை எவ்வாறு சொல்ல வேண்டும் என்பது தான். இவ்விதத்தில் எழுதியவரது பெயரைக் குறிப்பிடாமலே அவரது **"நடை"**யைக் கொண்டு அவர் யார்? என்பதை திறமைவாய்ந்த வாசகன் உடனே அறிந்து கொள்கிறான். தமிழ்ச் சிறுகதை வரலாறு புதுமைப்பித்தன் நடை, மௌனி நடை, ஜானகி ராமன் நடை, வண்ணன் இளவல் நடை, சுஜாதா நடை எனப் பல நடைக் கோலங்களை காலத்துக்குக் காலம் கண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**"நடை"**யின் முக்கிய கூறுகளாக உரையாடல், தொகை, உரை, வர்ணனை, சொல்லாட்சி, அணிப்பிரயோகம் என்பன அமைந்துள்ளன. இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றும் பற்றிய தெளிவும், இவை ஒவ்வொன்றின் முக்கியத்துவம் பற்றிய அறிவும் இளம் எழுத்தாளர்களுக்கு வேண்டப் படுவதொன்று.

உரையாடல் என்பது எமது அன்றாட வாழ்க்கையிலேயே முக்கியத்துவம் பெற்றிருப்பது நாம் அறிந்ததே. எனவே சிறுகதையிலும் இது முக்கியத்துவம் பெற்றிருப்பது வியப்புக்குரியதன்று. நாம் தெளிவாக மற்றவருடன், உரையாடாவிட்டால் எமது உரையாடலால் பயன் ஏற்படாது. சிறுகதையில் இடம்பெறும் சிறுகதை உரையாடலிலும் இத்தகைய தெளிவு இன்றியமையாதது. சிறுகதை என்பது வடிவத்தால் சிறியது. எனவே சிறுகதையில் இடம்பெறும் உரையாடலும் நீண்டு செல்வதாக அன்றி சுருக்கமாக அமைவது அவசியமானது.

மேற்கூறிய உரையாடல் பேச்சுமொழி சார்ந்ததாக அமைய வேண்டும். ஏனெனில் சிறுகதையின் தலையாய பண்பு. யதார்த்தம் என்கின்ற போது பாத்திரங்களுக்கிடையிலான உரையாடலும் யதார்த்தமாக அமைவது பேச்சு மொழியோடு பின்னிப் பிணைந்ததாகும். இத்தகைய பேச்சு மொழி பிரதேசங்களுக்குப் பிரதேசம் வேறுபட்டும் அமைகிறது. இவ்வாறு நோக்கும் போது சிறுகதையின் மண்வாசனை துலங்கும் இடங்களுள் பேச்சு மொழி முதன்மை இடம்பெறுகிறது என்பது தெளிவாகின்றது. தமிழ் நாட்டுச் சூழலில் புதுமைப்பித்தன் திருநெல்வேலித் தமிழையும், ஜெயக்காந்தன் அக்கிரகாரத் தமிழையும், ஜானகிராமன் தஞ்சாவூர் தமிழையும், ராஜநாராயணன் கரிசல் தமிழையும் தந்து தமது சிறு கதைகளை வளம் பெறச் செய்திருக்கிறார்கள்.

சிறுகதைப் பயிற்சிப் பட்டறைகளில் மாணவர்கள் சிறுகதைகளில் ஆங்கில மொழிப் பிரயோகம் இடம்பெறலாமெனக் கேட்பது வழக்கம். சிறுகதையில் இடம்பெறும் பாத்திரம் வெளிநாட்டுப் பாத்திரமாகவோ அல்லது வெளிநாட்டிலிருந்து வந்த தமிழ்ப் பாத்திரமாகவோ இருப்பின் நிட்சயமாக அவர்களது உரையாடல் முடிவடைந்த பின்னர் ஆசிரியர் கூற்றாக வரும் பகுதியாகும். அதாவது அதுவே இணைப்பை ஏற்படுத்தும் ஒன்றாக அமைகிறது. இது எழுத்து மொழியிலேயே அமைகின்றது. இத்தகைய தொகை உரை வகுதியிலேயே எழுத்தாளன் தனது எழுத்தாற்றலைக்காட்ட அதிக வாய்ப்பு ஏற்படுகிறது. உதாரணம் புதுமைப்பித்தனது சிறுகதையான.**"மதுரை மூதூரின் கர்ப்பக் கருகத்திலே மணியூசனிலே கருங்குயில் ஒன்று உந்தி ஆடிக்கொண்டிருந்தது. விளக்கமற்ற வெளிச்சத்திலே புலன்களுக்கு எட்டாத ஒளிப்பிரவாகத்திலே மணியூஞ்சல் விசையோடு ஆடியது. புலன் உணர்வு நகரும் இருட்டுடன் இருட்டாகப் புரள. கால் விசைத்து உந்திச் சுழிகுழிந்து அலை போல உகள கொங்கைகள் பூரித்து விம்மிக் குலுங்க, அன்னை மணியூசல் ஆடினான், தோள்துவள அவள் சங்கிலிகளைப்**





**பற்றி அமர்ந்த பாவனை சொக்கனை ஆரத்தழுவ அகங்காட்டும் செயல் போல அமைந்திருந்தது. அங்கயற்கண்ணியின் அதரத்திலே கீற்றோடிய புன்சிரிப்பு மருங்கிலே துவட்சி. கண்ணிலே விளையாட்டு. "நெஞ்சிலே நிறைவு" "செல்வி மணியூசல் ஆடினாள்" "அன்று இரவு"** சிறுகதையிலிருந்து வரும் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

நடையின் மற்றொரு கூறாகிய வர்னனை சிறுகதையைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றல்ல. இன்னுமொரு விதமாகக் கூறின் சிறுகதையின் தேவையை ஒட்டியே அதன் அவசியம் உருவாகிறது. சில சிறுகதைகளில் சிறுகதை நிகழும் சூழலை வர்ணிக்க வேண்டியேற்படலாம். உதாரணமாக குண்டுவெடிப்பொன்று நிகழ்ந்திருப்பின் சூழல் பற்றிய சித்தரிப்பு அவசியமானது. பாத்திரங்கள் முக்கியத்துவம் பெறும் சிறுகதைகளில் பாத்திரங்களின் தோற்றத்தை வர்ணிக்க வேண்டியேற்படும். பாத்திரங்களிடையே மனப்போராட்டம் ஏற்படுமானால் அது பற்றி விபரிக்க வேண்டியேற்படும். சுருங்கக் கூறின் சிறுகதையின் நோக்கம் அல்லது முக்கியத்துவம் எதனை மையமாகக் கொண்டதோ அதற்கேற்பவே வர்ணிக்க வேண்டிய தேவைகளும் உருவாகின்றன. எவ்வாறாயினும் வர்ணனை சுருக்கமாக அமைய வேண்டுமென்பதில் இளம் எழுத்தாளர்கள் மனங்கொள்வது அவசியமாகும்.

சிறுகதையைப் பொறுத்தவரையில் சொல்லாட்சியும் முக்கியம் வாய்ந்ததொன்றே! எழுத்தாளனது எழுத்தாற்றல் வெளிப்படும் இடங்களில் அதுவும் ஒன்றே! எழுத்தாளர்கள் சிலர் புதிய சொற்றொடர்களை உருவாக்குவதுண்டு. உதாரணம் மௌனியின் சிறுகதைகள் வேறுசில எழுத்தாளர்கள் சிறு சிறு வாக்கியங்களில் எழுதுவதுண்டு. உதாரணம் புதுமைப்பித்தனது அம்மாரு தண்ணீர் எடுக்க வருகிறாள் **"கும்மிருட்டு பஞ்சாங்கத்தின் படி இன்றைக்குச் சந்திரன் வர வேண்டும். ஆனால் அது மேகத்தில் மறைந்து கொண்டால் முனிசிபாலிடி என்ன செய்ய முடியும்? எப்போதும் போல் இரைச்சல் தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய் விட்டது திரும்பி வருகிறாள்.**

**சந்திரன் பக்கத்தில் ஒருவன் அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் கண் வைத்திருந்தவள். இருவரும் இருளில் மறைகிறார்கள் அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம் புருஷனுக்குப் பால், கஞ்சி வார்க்கத்தான் என்னமோ கற்பு. கற்பு என்று கதைக்கிறீர்களே இது தான் ஐயா பொன்னகரம்!"**

சிறுகதையின் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம். எஸ்போவின் சிறுகதையில் வடமொழிச்சொற்கள் அடிக்கடி இடம்பெறும். சிலரது சிறுகதைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும் சொற்கள் வெளியீட்டுத் தன்மை வாய்ந்தனவாக இருக்கும். உதாரணம் மருதூர்க் கொத்தனின் ஒளி என்ற சிறுகதை. சிலரது சிறுகதைகளில் பழந்தமிழ் சொற்களும், பாடல் அடிகளும் இடம் பெறும். மருதூர் கொத்தனின் சிறுகதைகள் பலவற்றில் இப்பண்பு உண்டு. அண்ணாத்துரையின் சிறுகதைகளில் அடுக்கு மொழி அதிகமாகத் தலை நீட்டும். சிலரது சிறுகதைகளில் இடம் பெறும். மொழிப்பிரயோகம் ஆழமான அர்த்தம் கொண்டதாக இருக்கும். போர்ச்சூழலில் அவசர அவசரமாக இடம் பெயர வேண்டிய குடும்பமொன்றின் சோகத்தைக் காட்டுவதற்கு **"அழுவதற்கு நேரமில்லை"** என்று குறிப்பிட்டார் தாமரைச்செல்வி. ஏழை எழுத்தாளன் ஒருவரது தாங்கொண்ணாத அவல வாழ்க்கையின் உண்மையான நிலையை வெளிப்படுத்தும் போது **"ஒரு நாள் கழிந்தது"** என்றார் புதுமைப்பித்தன். இளம் எழுத்தாளர்கள் சிறந்த சிறுகதைகளை தாம் வாசிக்கும் போது எழுத்தாளனது சொற்பிரயோகங்களை ஊன்றி மனங்கொள்வது வேண்டத்தக்கது.

சிறுகதை **"நடை"** சார்ந்த பிறிதொரு **"அணிப்பிரயோகமும்"** சிறுகதைக்கு மெருகூட்டுகின்றதொன்றாகிறது. இவ்வாறு எழுத்தாளர் பயன்படுத்தும் **"உவமை, உருவக அணிகளும்"** எழுத்தாளரது ஆக்கத் திறனை எடை போடுவதற்கு பேருதவி புரிகிறது. ஆற்றல் மிக்க எழுத்தாளர்கள் பயன்படுத்தும் அணிகள் சூழலுக்குத் தக்கவாறு அமைவதனைப் பின்வரும் மேற்கோள் காட்டுகிறது.

சிறுகதை எழுத்தாளரது **"நடை"** உருவாக்கத்திற்கும் அவ் எழுத்தாளர்களது சிறுகதை நோக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றதென்பதையும், இளம் எழுத்தாளர்கள் அவசியம் மனங்கொள்ள வேண்டும். உதாரணம் தனது சிறுகதைகள் ஊடாக பண்பாட்டையும், சமூகத்தையும் விமர்சிக்க முற்பட்ட புதுமைப்பித்தனது சிறுகதைகளில் அங்கதப்பண்பு அடிக்கடி வருகிறது.

மார்க்சீய நோக்குடைய எழுத்தாளரது படைப்புக்களில் கூர்மையான வர்க்கப்பார்வை வெளிப்படுகிறது. உதாரணமாக கணேசலிங்கம், தெளியான், டானியல் முதலானோரது சிறுகதைகள்.

தொகுத்துக் கூறுவதாயின் இளம் எழுத்தாளர்கள் சிறுகதை உருவாக்கத்தின் போது **"நடை"** பெறும் முக்கியத்துவத்தை இதுவரை கூறியவற்றிலிருந்து நன்குணர்ந்திருப்பர் என்பதில் தவறில்லை.

**- தொடரும் -**



தென்றல் காற்று : 05 சுகந்தம் : 17(சித்திரை – ஆனி) 2012




ஒற்றைச் சிறகடிக்கும்
காலொன்றொடிந்த அன்றில்
பறக்க, நடக்க
பாசத்தைப் பகிர்ந்தளிக்க....
இற்றைவரை முயன்றும்
இயலாமை அணைதடுக்க....!

விழிக் குளத்தில் நீர் ததும்பி,
விலாப் புடைக்க அனல் எழும்பி,
கற்பனைகளில் கரைந்தும்,
காலங்களில் விரைந்தும்...
ஏக்கப் பெருமூச்சின்
எல்லைகளைக் கடந்தும்....
எழுதாத சட்டங்கள்
எதிரிகளாய் அமைந்தும்...
இரவு, பகல் இடைவேளை
இல்லாத் துயர் மழையில்
நனைந்தும், கரைந்தும்....
நடைப்பிணமாய் அலைந்தும்!

நிகழ்வுகளின் நிழல்கள்....
நிம்மதியைக் குலைத்து....
இருப்பில் வெறுப்பும்,
இழப்பில் தவிப்புமாய்....
சுவைத்த களிப்பைச்
சுழியோடி, அசைபோட்டு...
இரைமீட்டி, இரைமீட்டி,
இடுக்கண் மலை முட்டி....!
தரை தட்டி நிற்கின்ற
தனிக் கப்பலாய்த் தரித்து....!

மறக்க நினைப்பனவே
மறுபடியும், மறுபடியும்
ஒன்றன்பின் ஒன்றாக....!
இன்னொன்றின் தொடராக....!

- ஏறாவூர் தாஹிர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன்றைய நவீன யுகத்தில் பல்வேறு பரிணாம மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அம்மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் எம்மை அழகுபடுத்த வேண்டிய தேவையுள்ளது. இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு "தென்றல்" இல் இருந்து அழகுக்கலை தொடர்பான குறிப்பை எமது வாசகர்களுக்காக வழங்குகிறது. (ஆ+ர்)

- ஆ.தாட்சாயினி Diploma in Beauty Culture - இருதயபுரம்.

## தேவையற்ற உரோமங்களை எவ்வாறு அகற்றுவோம்?

- தினமும் கடுகு எண்ணெயை பூசி 10 நிமிடம் வெயிலில் நின்றால் தோலில் உள்ள உரோமங்கள் காலப்போக்கில் வலுவிழந்து விடும்.
- கோதுமை மாவை கரைத்து தேவையற்ற முடிகள் காணப்படும் இடத்தில் தொடர்ந்து பூசி வந்தால் விரைவிலேயே உதிர்ந்து விடும்.
- குப்பைமேனிக் கீரை உலர்ந்தது, கோரைக்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள். இவையனைத்தையும் அரைத்து தினமும் இந்த பவுடரை பூசி வருவதன்மூலம் தேவையற்ற முடிகள் உதிர்ந்து விடும்.
- பொன் ஆவாரம்பூ, விரலி மஞ்சள், பயத்தம் பருப்பு மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்து குளியல் பவுடராக பயன்படுத்தி நல்ல பயனைப் பெறலாம்.
- குப்பைமேனி சாற்றில் கஸ்தூரி மஞ்சளை அரைத்து தேவையற்ற முடிகள் மீது பூசும் போது அவை உதிர்ந்து விடும்.








இந் நிலையில் யோகா உடல், உள, ஆன்மிக, சமூதாய ஆரோக்கியம் அடங்கிய முழுமையான ஆரோக்கியத்தைக் கொடுக்கும் சாதனமாக விளங்குகின்றது. அலோபதியென அழைக்கப்படும் ஆங்கில சிகிச்சை முறை நோய்களின் அறிகுறிகளை (Symptoms) உடனே நீக்கும். ஆனால் அந்நோய்கள் மீண்டும் தலை தூக்கும் சாத்தியக் கூறுகள் அதிகம் உண்டு. அத்துடன் உட்கொண்ட இரசாயன மருந்துகள் பாரிய பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தும் அபாயமுண்டு. ஆனால் யோகா எவ்வித பக்கவிளைவுகளோ, பணச் செலவோ இன்றி நோய்களை வேரோடு அறுத்துக் குணப்படுத்தும் சக்தி வாய்ந்தது என்றால் மிகையாகாது.

கிரமமான யோகா பயிற்சியில் ஈடுபட்டால் உடல் எடை குறையும். இதனால் அதிகரித்த உடற் பருமன் காரணமாக ஏற்படும் முன் குறிப்பிட்ட பல நோய்கள் தடுக்கப்படுகின்றன. யோகாவினால் மனம் அமைதியடைவதால் ஆழ்ந்த உறக்கம் ஏற்படும். இதனால் போதிய உறக்கமின்மை காரணமாக ஏற்படும் நோய்கள் தடுக்கப்படுகின்றன. போதிய உறக்கமின்மை காரணமாக அதிகரித்த உடற்பருமனை அடைவதும் தடுக்கப்படுகிறது. பத்து நிமிட சவாசனம் (சாந்தி ஆசனம்) இரண்டு மணித்தியால ஆழ்ந்த உறக்கத்தின் பலனைக் கொடுப்பதால் இழந்த தூக்கத்தை ஈடு செய்து உடல் பருமன் அதிகரிக்காமல் தடுக்கும்.

இதே சவாசனம் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைக்கும். இதயத்துடிப்பை சீராக வைக்கும். சுவாசம் சீராக நடைபெறத் தூண்டும். மன உளைச்சலை அதிகரிக்கும். அட்ரீனலின் (Adrenalin) என்ற ஹார்மோனை சீரான அளவு சுரக்கத் தூண்டி மனம் அமைதியடைய வைக்கும். நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். இதனால் பல நோய்கள் குணமடையும். உடல், மனம் அமைதியடையும், மன இறுக்கம் அகலும், தசைகள் தளரும்.

உயர் இரத்த அழுத்தம் வெகு விரைவில் இதயவில் மரணத்தை ஏற்படுத்தும் ஒரு கொடிய நோயாக மாறிவிடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் இன்று 97 கோடி உயர் இரத்த அழுத்த நோயாளர்கள் உள்ளனர். இத் தொகை 2027ஆம் ஆண்டு 100 கோடியாக அதிகரிக்கும் எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது 57 சதவீத பக்கவாதத்தையும், 24 சதவீத மாரடைப்பையும் ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. உயர் இரத்த அழுத்தத்தை 5மி.மீ குறைத்தால் 40 சதவீத மாரடைப்பைத் தடுக்க முடியும் எனவும் உடல் எடையை ஒரு கிலோ குறைத்தால் ஒரு மி.மீ இரத்த அழுத்தம் குறையும் எனவும் சமீபத்திய ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யோகா ஆசனங்கள் கணையச் சுரப்பியை (Pancreas) நன்கு செயற்படத் தூண்டுவதால் அதிக இன்சுலின் (Insulin) சுரக்கப்பட்டு இரத்தத்தில் உள்ள சீனி எரிக்கப்படுகிறது. இதனால் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் வைக்கப்படுகிறது. ஜானு – சீராசனம் என்ற ஆசனத்தை மட்டுமே கால்களை மாற்றி, மாற்றி ஆறு தடவைகள் செய்தால் நீரிழிவு நோய் கட்டுப்படுத்தப்படும்.

யோகா இவ்வாறு உயர் இரத்த அழுத்தத்தையும், நீரிழிவு நோயையும் கட்டுப்பாட்டில் வைப்பதன் மூலம் சிறுநீரக நோய், கண் நோய் போன்ற நோய்கள் ஏற்படாது தடுக்கின்றது.

யோகா மூளையில் சுரக்கப்படும் அமைதியை ஏற்படுத்தும் என்டோபின் (Endorphin) என்ற பொருளை அதிக அளவு சுரக்கத் தூண்டுகிறது. இதனால் மன உளைச்சல், கோபம், ஆத்திரம் போன்றவை அகல்கின்றன. மேலும் யோகா மன உளைச்சலை ஏற்படுத்தும் லக்டேற் (Lactate) என்ற பொருளின் அளவைக் குறைப்பதன் மூலம் மன உளைச்சல் ஏற்படுவது மேலும் தடுக்கப்படுகிறது. இதனால் மனம் அமைதியடைந்து உடல், உள நோய்கள் ஏற்படாது தடுக்கப்படுகின்றன.

யோகா இரத்தத்தில் கொலொஸ்ரோலின் அளவைக் குறைப்பதன் மூலம் இருதய நோய் ஏற்படாது தடுக்கிறது. உடலில் உள்ள அட்டீரனல் சுரப்பியால் (Adrenal Gland) சுரக்கப்படும் அட்டீரலின் (Adrenalin) என்ற ஹார்மோன் அதிகமாகச் சுரந்து இரத்தக் குழாய்களில் அடைப்பை உண்டாக்கி மாரடைப்பை ஏற்படுத்துகிறது. யோகா அட்டீரலினை அளவாகச் சுரக்கப் பண்ணுவதால் மாரடைப்பு ஏற்படுதல் தடுக்கப்படுகிறது.

யோகா நரம்புகளைப் பலப்படுத்துவதால் நரம்புகள் சம்பந்தமான வியாதிகள் ஏற்படாது தடுக்கப்படுகின்றன. யோகாவின் ஒரு அம்சமான பிரணாயாமம் மூலம் உடலிலுள்ள அசுத்த இரத்தம் சுத்திகரிக்கப்பட்டு அதன் சுற்றோட்டமும் துரிதமடைகிறது. மேலும், அதிகபட்ச பிராண சக்தியையும் உள்வாங்கப்படுகிறது. இவை உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதால் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதால் நோய்கள் தாக்குவது தடுக்கப்படுகிறது.

பொதுவாக உடலில் நோய்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணிகள் அஜீரணம், உணவு செமியாமை, சரியாக மலம் கழிக்காமை (Constipation), மூளை, நரம்பு கோளாறுகள், இரத்தக்குறைவு, அசுத்த இரத்தம் என்பனவாகும்.





உடலிலுள்ள நாளமில்லாச் சுரப்பிகள் (Endocrine Glands) சரியான அளவில் ஹார்மோன்களைச் சுரக்கத் தவறுதல் காரணமாகத் தான் மேற்படிப் பிரச்சினைகள் ஏற்பட்டு நோய்கள் தாக்குகின்றன. என்பது விஞ்ஞான ரீதியான முடிவாகும். ஆங்கில வைத்தியர்கள் இந்த நாளமில்லாச் சுரப்பிகளைப் பற்றிக் கடந்த ஒரு சில நூற்றாண்டுகள் முன் தான் அறிந்திருந்தனர். ஆனால் நமது யோகா சித்தர்கள் இச் சுரப்பிகளைப் பற்றி ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தனர் என்பது வியப்பாக இருக்கலாம். இவர்கள் இச் சுரப்பிகளுக்கு சூட்டிய பெயர் ஆதார சக்கரங்கள் என்பதாகும். யோகா ஆசனங்கள் மூலம் இச் சுரப்பிகளை சரியான அளவில் ஹார்மோன்களைச் சுரக்கப் பண்ணுவதன் மூலம் இவர்கள் நோய்கள் ஏற்படாதவாறு தடுத்ததுமல்லாது ஏற்கனவே ஏற்பட்ட நோய் களையும் மிகத் துல்லியமாகக் குணப்படுத்தியுள்ளனர். உடலிலுள்ள ஒவ்வொரு ஆதாரச் சக்கரங்களும் ஒவ்வொரு நாளமில்லாச் சுரப்பிகளுக்கு இணையாகும்.

பாடசாலைகளில் யோகாவை ஒரு பாடமாகக் கற்பித்தால் மாணவர்கள் ஆரோக்கியத்தைப் பெறுவதுமல்லாது ஞாபக சக்தி அதிகரிப்பதன் மூலம் போட்டிப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர் பதவிகளை வகிப்பார்கள். மேலும் முதுமையிலும் இளமையுடன் ஆரோக்கியமாக வாழ்வார்கள். காரியாலயங்களில் தொழில் புரிவோருக்கு யோகா கற்பித்தால் அவர்களின் செயற்திறன் அதிகரிக்கும், வரவின்மை குறையும். தொழிற்சாலைகளில் யோகா கற்பித்தால் தொழிலாளர்களின் வரவும், ஊக்கமும், செயற்திறனும் அதிகரிப்பதன் மூலம் உற்பத்தி அதிகரிக்கும். இதனால் பெரும் இலாபம் ஈட்டுவதுமல்லாது நாட்டின் பொருளாதாரமும் மேம்படும்.

யோகா பயில நேரமில்லை எனப் பலர் கூறுகின்றார்கள். இருபத்திநான்கு மணித்தியாலயங்களை வைத்துக் கொண்டு நேரமில்லை எனக் கூறுபவர்கள் நேரத்தைச் சரியாக முகாமைத்துவம் செய்யத் தெரியாத வர்களாகும். வழமையை விட முப்பது நிமிடங்கள் முந்தி நித்திரை விட்டு எழும்பினால் நேரம் கிடைத்து விடும். இந்த முப்பது நிமிட யோகா பயிற்சி வாழ் நாள் பூராகவும் நோய் நொடிகளின்றி வாழ துணை செய்வதுமல்லாது நோய்க ளுக்குச் செலவிடப்படும் இலட்சக்கணக்கான பணத்தை மிச்சப்படுத்தவும் உதவும்.

எனவே ஆரோக்கியத்தில் அக்கறையுடையோர் ஆரோக்கியமான உணவுடன் கூடிய கிரமமான யோகா பயிற்சியில் ஈடுபட்டால் ஆரோக்கியத்துடனும், மனநிறைவுடனும் நீண்ட காலம் வளமாக வாழலாம்.

**- முற்றும் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புதிய வரவுகள்

நூல் : "மீண்டுமொரு முறை" (கவிதைகள்)

ஆசிரியர் : உ. [illegible]

வெளியீடு : அருள் வெளியீட்டகம்
37/7, மத்திய வீதி, உவர்மலை
திருகோணமலை

விலை : ரூபா. 150




மீண்டுமொரு முறை கவிதை நூலில் 30 ஆண்டுகளாகப் புரையோடிப் போன இனப்பிரச்சினையின் கொடூரத்தை வெளிக்கொணரும் வகையிலான கவிதைகள் பிரசுரமாகியிருப்பது வரவேற்கத்தக்கது.

இந்நூல் அணிந்துரை, பதிப்புரை, உரை, கவிதைகள் என 77 பக்கங்களில் அழகிய அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ளது.

---

நூல் : "ஸ்ரீ சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய வரலாறு"

ஆசிரியர் : செல்லத்துரை செல்வசிங்கம்

வெளியீடு : ஆலய பரிபாலன சபை, எல்லைவீதி
மட்டக்களப்பு

விலை : ரூபா. 100



இந்நூல் ஆலயக் கீர்த்தியான ஆலய வரலாற்றினை வெளிக்கொணரும் வகையில் நூலுருப் பிரசுரமாக வெளிவந்துள்ளது. இந்த நூலின் மூலமாக வரலாற்றுப் பெருமையை அறியும் வாய்ப்பு எமக்குக் கிட்டியுள்ளது.

இந் நூலில் ஆலய வரலாற்றுப் பதிவுகள், திருப்பொன்னூஞ்சல் பாடல்கள், ஆலய முன்னைய – இன்றைய தோற்றம் புகைப்படத்தின் [illegible] வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

இது ஆலய வரலாறுகளை ஆவணப்படுத்தும் வரலாற்று நூல்.






## படமாக் – பதிவுகள்

- ரவிப்ரியா -





மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில், "தென்றல்" அறிமுகப் பாடலைப் பாடிய மனோலிங்கசிவம் புருஷோத்தமன், தமிழ் மொழி வாழ்த்து இசைப்பதையும், மேற்படி சங்கப் பொருளாளர் வீ.ரஞ்சிதமூர்த்தி வருடாந்த கணக்கறிக்கையினைச் சமர்ப்பிப்பதையும், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாணக் கலாசார உதவிப் பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம் எழுதிய "ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய வரலாறு" நூலினை நூலாசிரியர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.




மட்/ கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உரையாற்றுவதையும், மண்முனைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் மா.கந்தசாமி போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவிக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.







கொழும்பில் நடைபெற்ற தொழில்நுட்ப கண்காட்சியில் பட்டிருப்புத் தேசிய பாடசாலை மாணவன் சி.பிரசன்னாவின் கண்டுபிடிப்பான வயலுக்கான வெருட்டியை தூர இடத்தில் இருந்து கைத்தொலைபேசி மூலம் இயக்கும் தொழில் நுட்பத் திறனாக தேசிய ரீதியில் பாராட்டுப் பெற்றது. இவருக்கு பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. நகுலேஸ்வரி புள்ளநாயகம் விருது வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.



அண்மையில் ஆரையம்பதியில் திறந்து வைக்கப் பட்ட பேராசிரியர் சாண்டோ சி.சங்கரதாஸ், சாண்டோ வே. ஸ்ரீதாஸ் ஆகியோரின் சிலைகளை மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும், தொல்லியல் ஆய்வாளருமான செல்வி. க.தங்கேஸ்வரி திறந்து வைத்து உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மத, பிரதேச பாகுபாடுகளின்றி மக்களுக்கு சேவையாற்றிய உத்தமர் சில்வெஸ்டர்!

- மதுரன் -



கிழக்கு மாகாணத்தில் இன, மத பிரதேச பாகுபாடுகளின்றி மக்களுக்கு சேவையாற்றிய அருட்தந்தை தேசமான்ய பேராசிரியர் த.சிறிதரன் சில்வெஸ்டர் அடிகளார் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எகெட் - ஹரித்தாஸ் நிறுவன முன்னாள் பணிப்பாளராகவும், மட்டு - திருமலை மறைமாவட்ட ஆயர் இல்லத்தின் பிரதான நிதிப் பொறுப்பாளராகவும் பணிபுரிந்ததை எண்ணிப் பார்க்கிறோம்.

இவர் 1993ஆம் ஆண்டு குருவாக திருநிலைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து திருமலை, மூதூர், கல்லாறு ஆகிய பணித்தளங்களில் குருவாகப் பணியாற்றினார்.

இவரின் சமூக சேவையைக் கண்ணுற்றுக் கண்ட இந்தியாவின் பெங்களூரில் உள்ள **"சர்வோட்டம் - நியூடிஸ்லி"** அமைப்பு 2010இல் பேராசிரியர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

அருட்தந்தை பேராசிரியர் சிறிதரன் சில்வெஸ்டர் கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற யுத்தம், ஆழிப்பேரலை அனர்த்தம் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது இன,மத, பிரதேச பாகுபாடுகளின்றி பெருந்தொகையான மக்களுக்கு உதவிகளை வழங்கினார்.

தனது இறுதி தருவாயில் கூட மக்களின் துயர்துடைக்கவென மக்களின் பிரச்சினைகள் அடங்கிய மகஜரை கிழக்கு மாகாண தவிசாளர் எச்.எச்.பாயிஸிடம் தேசிய சமாதான பேரவை நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேராவுடன் இணைந்து கையளித்திருந்தார்.

இந்நிலையில் அன்னாருக்கு **"தென்றல்"** தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.





# கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை

- ஆ.மு.சி.வேலழகன் -

அன்பார்ந்த வாசகர்களின் கவனத்திற்கு!

நாம் கடந்த 16, தை – பங்குனித் தென்றல் இதழிலே **"கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை"** எனும் தொடரில் முதலில் 1.எழுத்து 2.அசை 3.சீர் 4.தளை எனக்குறிப்பிட்டு எழுதியும் தளை என்பதை உங்களுக்கு இப்போதைக்கு எழுதி விளங்கப்படுத்தினால், அது உங்களுக்கு விளங்குவது சிரமம் என்ற எண்ணத்திலே **"தளையை"** விட்டு விட்டு 5. அடியைப்பற்றிச் சற்று எழுதியிருந்தேன்.

அடியென்பது முன்பு நான் எழுதியதன்படி எழுத்துக்கள் சேர்ந்து அசையாவதும், அசைகள் சேர்ந்து சீராவது போல் சீர்கள் சேர்ந்தாலே அடியாகும்.

ஒரு சொல்லில் எத்தனை அசைகள் வருகின்றதோ அந்த வரும் அசைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே அச்சொல்லுக்கு ஒரு பெயர்வரும். ஆம்! சொல் என்பதும் சீர் என்பதும் ஒன்றே தான். எ.கா **"எனது"** என்பது ஒரு சொல் இது ஓர் சீரே தான். இந்தச் சொல்லுக்குள் எத்தனை அசை உள்ளது? அல்லது சீருக்குள் எத்தனை அசை உள்ளது என்று பார்ப்போம். எனது இந்த எனது என்ற சொல்லில் மூன்று குறுகிய ஓசை எழுத்துக்களான **"குறில்"** எழுத்துக்கள் வந்துள்ளன. எனவே இம்மூன்று எழுத்துக்களையும் அசையாகப் பிரிப்போமானால், **"என"** = நிரையசையாகவும் **"து"** நேரசையாகவும் வந்துள்ளது. ஆகவே இந்த எனது என்ற சீரின் பெயர் ஈரசைச்சீர் எனப் பெயர் பெறும்.

இதே போல்தான் ஒரு அடியில் எத்தனை சீர்கள் உள்ளதோ அந்தச் சீர்களின் எண்ணிக்கையைக் கொண்டே அந்த அடிக்கு அல்லது அடிகளுக்கு ஒவ்வொரு பெயர்கள் வரும். எ.கா ஒரு சீரில் ஒரு அடிவராது. ஆனால் இருசீர் இணைந்தாலே ஒரு அடிவரும். ஆம்!

1. இரு சீர்கள் இணைந்தால் = குறளடியென்றும்
2. மூன்று சீர்கள் இணைந்தால் = சிந்தடியென்றும்
3. நான்கு சீர்கள் இணைந்தால் = அளவடியென்றும்
4. ஐந்து சீர்கள் இணைந்தால் = நெடிலடியென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஐந்து சீர்களுக்கு மேல் இணையும் அடிகளை கழி நெடிலடியென்றும் கூறுவர். கழி என்பது மூங்கில்த் தடி ஆம்! மூங்கிலைப் போல் நீளமான அடிஎன்றே பொருள்படும்.

இனி சீர்கள் இணைந்து வரும் கவிதைகளைப் பார்ப்போம்.

**"மனைதீர்த்து நாயேன்**
**சினைதீர்த்த லானேன்**
**நனைதீர்த்த மாடே**
**வினைதீர்த்த தேவே"**

இந்த இருசீர் கொண்ட அடிகளால் அமைந்த பாடலானது குறளடி என்ற பெயரைக் கொண்டதே. ஆம்! இரு சீர்களில் நான்கு அடிகளில் வந்த குறளடியாகும். மேலும்:-

**குறளடி**

**"மனைதீர்த்து நாயேன்**
**சினைதீர்த்த லானேன்**
**நனைதீர்த்த மாடே**
**வினைதீர்த்த தேவே"**

இதேபோல் மூன்று சீர்களில் வரும்பாடல்:-

**சிந்தடி**

**"நரக வாதையில் வன்பிறார்**
**தரணி மீதொரு கொன்பெறார்**
**சுரரு லோகமும் இன்புறார்**
**அருணை நாயகர் அன்பறார்"**

இப்பாடல்களை இடைவிட்டு விட்டு எழுதக்காரணம் நீங்கள் கவனிக்கவும் ஒவ்வொரு வரியிலும் வரும் சீர்களை இனங்கண்டு கொள்ள வேண்டும் என்பதனால் அடுத்துவரும்.

**அளவடி**

**"திகட சக்கரச் செம்மும் ஐந்துளான்**
**சகட சக்கரத் தாமரை நாயகன்**
**அகட சக்கர வின்மணி யாவுறை**
**விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"**

இப்பாடலானது நான்கு சீர்களைக் கொண்டு அளவடியால் வந்த பாடலாகும். எனவே சீர்களைக்கொண்டே அடிகளின் பெயர்கள் வரும்.





**நெடிலடி**

**"முன்னம்நின் அன்னை முலையூட்டி**
**மையிட்டு மூக்குஞ்சிந்தி**
**கன்னமும் கிள்ளிய நாளல்ல**
**வேடீன்னைக் காப்பதற்கே**
**அன்னமும் மஞ்ஞையும் போலிரு**
**பெண் கொண்ட ஆண்பிள்ளை நீ**
**இன்னமும், சின்னவன் றானோசெந்**
**தூரில், இருப்பவனே!"**

மேலே கவனியுங்கள். குறளடியில் இருசீர்கள் இடை வெளிவிட்டு வந்துள்ளது போல் சிந்தடியிலும், அளவடியிலும், நெடிலடியிலும் இடைவெளி விட்டே எழுதியுள்ளேன். எனவே நீங்கள் ஒவ்வொரு சீரையும் புரிந்து கொண்டு அந்தந்த சீர்கள் இணைந்து வந்ததற்கேற்ப அடிகளின் பெயர்களை மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும்.

கீழே உள்ள பாடல் எட்டு வரிகளில் எழுதப்பட்டிருந்தாலும், இந்தப் பாடல் ஐந்து சீர்களை ஆம்! ஒரு வரியில் மூன்று சீர்களும் ஏனையவரியில் இரு சீர்களுமாக ஐந்து சீர்களைக் கொண்ட நெடிலடிப்பாடலாகும். இனிவரும் பாடல்கள் ஐந்து சீர்களுக்கு, மேல் வரும் பாடல்களாகும். ஆகவே ஐந்து சீர்களுக்கு மேல் வரும் பாடல்களின் எண்ணிக்கையை அதாவது சீர்கள் இடம் பெறும் எண்ணிக்கைக்கு ஏற்ப எ.கா.ஆறு சீரில் ஒரு பாடல் வந்தால் அறுசீர்கழிநெடிலடி, எழுசீர்கழிநெடிலடி, எண்சீரடி, பதின்சீரடி, பன்னிருசீரடி, பதினான்குசீரடி என்ற பெயர்கள் கொண்டே வரும்.

**அறு சீர்க் கழிநெடிலடி**

**"பச்சைமா மலைபோல் மேனி**
**பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர் ஏறே**
**ஆயர்தம் கொழுந்தே என்றும்**
**இச்சுவை தவிர யான்போய்**
**இந்திர லோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன்**
**அரங்கமா நகருளானே!"**

அன்புள்ள வாசகர்களே! நான் தங்களிடம் பணிவன்போடு வேண்டுவது யாதெனில் நான் எழுதிக்கொண்டு போவதிலும் நீங்கள் இவற்றை அக்கறையில்லாமல் ஆர்வமில்லாமல் - ஒப்புக்காகப் பார்த்து விட்டுத் தூக்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுவதிலும் என்ன பயன்? எனவே, ஒவ்வொன்றையும் உன்னிப்பாக கவனித்து எமது மொழியிலே உள்ள எழுத்துக்களை உயிரெழுத்துக்கள், ஆயுத எழுத்து, மெய்யெழுத்துக்கள், உயிர்மெய்யெழுத்துக்கள், குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம் என எழுத்துக்களை இனவாரியாகப் படிப்பதோடு அசைகளையும் நேரசை, நிரையசை, சீர், அடியெனப் புரிந்து கொண்டால் யாப்பிலக்கணத்தை நூறுவிகிதம் தெரிந்துதான் கவிதை எழுதவேண்டு மென்றில்லாமல், ஐம்பது அறுபது சதவிகிதமாவது புரிந்து கொண்டால் எமக்குப் பிரயோசனமாக இருக்குமல்லவா?

உதாரணத்திற்கு நாம் ஒரு கவிதையை - பாடலை எழுதினால் அதனை ஒருவர் இது என்னபாடல், இதன் அடியென்ன? சீரென்ன என்று கேட்டால் கேட்டவருக்குப் பதில் சொல்லக்கூடியவகையிலாவது நமது செல்வங்களை அறிந்திருக்கக்கூடாதா? ஆம்! நாம் பெரும், கவிஞன், புலவன் என்றில்லா விட்டாலும் அதன் உண்மைத்தன்மையைக் கொஞ்சமாவது புரிந்து வைத்தி ருக்கக்கூடாதா?

-தொடரும் -

## தென்றலின் பார்வையில்



புத்தளம் அருவி விருட்ச அமைப்பினால் புத்தளம் சாஹிரா கல்லூரி அன்வர் மண்டபத்தில் நடாத்தப்பட்ட கலைஞர்கள் பாராட்டு நிகழ்வில், பொருளாதாரப் பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் அடைத்து வருவதில் ஆற்றி வரும் பங்களிப்புக்காக உடப்பு வீரசொக்கனுக்கு பொன்னாடை போர்த்தி, விருது வழங்கிய கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.
(படம் + தகவல் – உடப்பு வீருபர்)





# நாட்டாரியல் (Folk Fore) ஓர் ஆய்வு

கல்லடியூரான் ஆரையூர் அருள்

**நாட்டாரியலில் நாட்டார் பாடல்களின் பங்களிப்புக் குறித்த பார்வை.**

உலகில் இலக்கியம் தோற்றம் பெறுவதற்கு நாட்டார் பாடல்களே முறைசாராக் கல்வியின் முன்னோடியாகும். ஏடெடுத்து எழுதுகோல் ஏந்தி எடுபிடி போல் பாடசாலையில் போய்ப் பாடத்திட்டப்படி பயிலாது வானமே பள்ளியாய், வையகமே குருவாய், மோனத்தவம் கிடக்கும் முக்கடலே ஞானக் கல்விதராய் பாடம் பயின்று வருவது நாட்டார் பாடல்கள்தான். கள்ளங்கபட மற்ற வெள்ளையுள்ள நாட்டுப்புற மக்களின் உள்ளத்து உணர்வூற்றுக்களின் உணர்ச்சி வெளிப்பாடான நாட்டார் பாடல்கள் இனிமையும், இசையும், உணர்ச்சியும், உண்மையும் ஒருங்கிணைந்திருக்கும். இப் பாடல்கள் படிப்பறிவில்லா ஏழைக்கிராமத்து மக்களால் உள்ளத்தில் உள்ளதை உள்ளவாறே அவர்கள் வாழும் கிராமத்தின் மண்வளச் சொற்கள் கொண்டு பாடப்பட்ட இலக்கியக் கருவூலங்களாகும். நாட்டார் பாடல்கள் அடித்தளத்தில் ஓடிக்கொண்டிருக்கும் ஜீவ நதிகள் கங்கை நதிக்கே உயிர் கொடுக்கும் ஆகாச கங்கையாகும். மேற்றளத்தில் ஓடும் மற்றைய கலை நதிகள் வற்றிப்போய்த் தன் ஆன்மாவையே இழக்கநேரிடும் போது, நாட்டுப்புறப் பாடல்களான ஜீவ நதியுடன் தொடர்பு கொண்டு அவற்றில் மலிந்து வற்றாத ஊற்றுக்களாகவுள்ள பண்பு நிறை பாட்டுக்களையும், கூற்றையும், ஓசையையும், கற்பனை நிறைவளச் சொற்களையும் மீண்டும் பெற்று உயிர் பெறுகின்ற ஒரு நாட்டின் கலாசாரப் பாரம்பரியத்தின் அம்சங்களைக் காட்டி நிற்பன இந்த நாட்டார் பாடல்களே.

சேர்த்துப் பிசைந்த களிமண்ணாகி வேண்டி விரும்பும் படியான வடிவமைப்பைப் பெறக்கூடியதே நாட்டார் பாடல்கள். கொள்கலன்களுக்கு தகுந்தாற்போல் நீர் வடிவம் பெறுவது போல் பாடல்களுக்கு ஏற்ப, பாடுபவர்களுக்கு ஏற்ப அதன் வடிவம் மாறுபடும். இப் பாடல்கள் மழலை இன்பம் அளிப்பது போல் மயக்கும் இன்பத்தை அளிக்கும் தன்மையுடையவை. இந்த வகையில் இலங்கை மணித்திருநாட்டின் நாட்டார் பாடல்களின் பாரம்பரியத்தை மேலோட்டமாக எடுத்து ஆராய்வோமாயின் அதனைப் பின்வருமாறு பிரதான தலைப்புக்களில் பார்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தென்னிந்திய நாட்டார் பாடல்கள்
2. கிழக்கிலங்கை நாட்டார் பாடல்கள்
3. வடபுல நாட்டார் பாடல்கள்
4. மலைநாட்டு நாட்டார் பாடல்கள்
5. இஸ்லாமிய நாட்டார் பாடல்கள்
6. சிங்கள கிராமிய நாட்டார் பாடல்கள்

இந்த ஒவ்வொரு பிரிவிலும் பல நூற்றுக்கணக்கான நாட்டார் பாடல்கள் இலக்கிய நயத்தோடும், கலை நுணுக்கத்தோடும் அவ்வப் பிரதேச மண்வாசனைகளோடும் சேர்ந்து மிளிர்வதைக் காணலாம். நாட்டார்பாடல்களின் உட்கூறுகளை கருத்தேந்தி வகைப்படுத்தினால் தாலாட்டு பாடல்கள், பிள்ளைகளின் விளையாட்டு பாடல்கள், வேடிக்கை பாடல்கள், தொழிற் பாடல்கள், கும்மிப் பாடல்கள், கரகப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்கள், காவடிப் பாடல்கள், கவிகள், தெம்மாங்கு, தத்துவ பாடல்கள், கொம்புமுறிப் பாடல்கள், கோலாட்டப் பாடல்கள், எண்ணெய் சிந்து, நாட்டுக் கூத்து, வில்லுப் பாட்டுக்கள், பொல்லடி பாடல்கள், ஒப்பாரி பாடல்கள் என்று பல்வகைத் தன்மையுடையதாக பரந்து விரிந்து செல்வதனை அறிந்து கொள்ளலாம்.

**தாலாட்டுப்பாடல்கள்:-** தாலாட்டின் சிறப்பினை, உயர்வினை மிக அழகாகவும் நுட்பமாகவும் இரத்தினச்சுருக்கமாக கூறியுள்ள தமிழண்ணல், **"தாய்மை அகிலத்திற்களித்த அரும்பெரும் கொடையான முதலிலக்கிய பரிசே தாலாட்டு". "ஆழங்காண முடியாத தாயாகிய அன்புக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு"** என்று திரு.ஆறு.அழகப்பன் கூறுகின்றார். ஆம்! தாய்மையின் நுண்ணிய பாசவுணர்வுகளாக எடுத்துக்காட்டும் தாலாட்டின் இசையின் பக்தியிலே, சேய் எல்லாவற்றையும் மறந்து கண்ணுறங்கத் தொடங்கி விடுகிறது. குழந்தைகளின் பிஞ்சு இதயங்களைச் கவர்ந்து இழுத்து அவர்களை ஆனந்தக்களிப்பில் ஆற்றுப்படுத்தும் ஆற்றலுடைய தாலாட்டுப் பாடல்களில் பசுமையான நினைவுகளும் பக்குவமான கற்பனைச்சுவைகளும், இளவேனிற்கால இன்ப அழகும் தனித்துவம் பெற்று மிளிர்கின்றன. இத்தகைய தாலாட்டுப் பாடல்களை மட்டக்களப்பு வழக்கில் **"ஆராட்டு"**, யாழ் வழக்கில் **"ஓராட்டு"**, தமிழ்நாட்டு வழக்கில் **"ராராட்டு"** எனவும் முஸ்லிம்கள் **"ஓலாட்டு"**, **"ரோராட்டு"** எனவும் பேச்சு வழக்கில் அழைப்பர். தமிழ் இலக்கியத்தில் ஒரு பகுதியாகவும் தாலாட்டு முக்கிய இடத்தினைப் பிடித்திருப்பதனை, திருமொழியில் திருமாலைப் பெரியாழ்வார் தாலாட்டுவதனால் அறியலாம். தால் என்றால் நாக்கு. நாவினால் அசைத்துப் பாடுவதனால் தாலாட்டு என்றும் கூறுவர். தாலாட்டு





கிராமத்துக்குக் கிராமம், சாதிக்குச்சாதி, மதத்துக்குமதம் வித்தியாசமுடையவை என்றாலும் சில சொற்கள் பொதுவானவையாகவே காணப்படுவது சிறப்பம்சமாகும்.

**"ஆராரோ ஆரிரரோ**
**ஆரிரரோ ஆராரோ"** அல்லது
**"ஆராரோ ஆராரோ**
**ஆரிரரோ ஆரிரரோ"** அல்லது
**"ஓராரோ ஓரிரரோ**
**ஓரிரரோ ஓராரோ"** அல்லது
**"ஓராரோ ஓரிவரரோ**
**ஓரிவரரோ ஓராரோ"** அல்லது
**"ராரிரரோ ராராரோ**
**ராராரோ ராரிரரோ"** அல்லது
1. **"ஆராரோ... ஆரிவரோ..."**
2. **"ஓராரோ ஓரகண்டே..."**
3. **"ஆரா...ராரா...ராராரோ..."**

1-3 வரையானவை முஸ்லிம் கிராமத்து மண்வளச் சொற்களாகும். தாலாட்டுப் பாடல்கள் எந்த இசைவடிவில் இருந்தாலும் அவை அனைத்தும் குழந்தைகளை உறங்கச்செய்வதற்காகப் பயன்படுத்துவதோடு மட்டுமன்றி தாயின் மனச்சுமையை இறக்கிவைத்தல் போன்ற பொதுமையான நோக்கங்களுக்காகவே பாடப்படுகின்றன.

**"பச்சையிலுப்பை வெட்டிப்**
**பால்வடியத் தொட்டில் கட்டித்**
**தொட்டிலுமோ பொன்னாலை**
**தொடுசெயிறோ முத்தாலை**
**முத்தென்ற முத்தோ நீ**
**முதுகடலில் ஆணிமுத்தோ**
**சங்கீன்ற முத்தோ**
**சமுத்திரத்தினாணிமுத்தோ"**

என்ற வரிகள் பொதுவான எல்லா வகைத் தாலாட்டிலும் ஒவ்வோரடியும் அந்தாதியாயும் அமைந்து காணப்படுகின்றது.

-தொடரும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















# "தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி இல – 08



**இடமிருந்து வலம்**

01. இது தான் கடவுளென்று கடவுளுக்கும் தெரியும்
03. மூக்கு
05. வீதி
07. மாடத்தில் வைத்து வணங்கும் மூலிகை.
09. தோல் வாத்தியம் (திரும்பியுள்ளது)
11. இதுவும் தானம் செய்யப்படுகிறது.
13. பறவைகளின் உற்பத்தியிடம் (குழம்பியுள்ளது)
15. திருப்பதியுடன் நெருங்கிய தொடர் புடையது
17. சூது தாயங்களில் ஒன்று
18. ஒருவகை வானரம் (திரும்பியுள்ளது)
20. பெருமை என்பதற்கு ஒத்தசொல் "மை" இன்றி நிற்கிறது. (திரும்பியுள்ளது)
22. பண்டைத் தமிழரின் தூய காதல் ஒழுக்கம் பற்றிய பாடல் (குழம்பியுள்ளது)
24. பாதுகாப்பான பணப்புழக்கமுள்ள ஓரிடம்
26. திரவம் என்பதன் எதிர்ச்சொல்
28. சாறு பிழிந்த கரும்பு (குழம்பியுள்ளது)
29. நாற்காலி (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. ஐம்பொறிகளுள் ஒன்று
02. தனக்குத் தனக்கென்றால் இது படக்குப் படக்கென்று அடிக்குமாம்.
04. காந்தியடிகள் தேச விடு தலைக்காக இங்கு பல தடவை சென்று வந்தார்.
06. இந்தியாவில் இந்த ஆற்றின் பெயராலான அணைக்கட்டு பெரும் பிரச்சினையாகியுள்ளது (தலைகீழ்)
08. சுவை (தலைகீழ்)
10. காஞ்சிபுரம் இதற்குப் பெயர் பெற்றது.
12. பொட்டு
14. வஞ்சனையோடு கூடிய பழி வாங்குதல் (குழம்பியுள்ளது).
16. உயிரற்ற மனித உடல் (குழம்பியுள்ளது)
19. மூப்பு.
21. பதின்மூன்று வயதுடைய பெண்.
23. பிரதம விருந்தினர். பிழை விட்டால் அகதியாவார்.
25. தோழி (தலைகீழ்)
27. மயில் தோகையில் இது உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.
* தபால் உறைக்குள் வைத்து அனுப்பப்படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
* முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 300/- 200/-, 100/- வழங்கப்படும்.
* போட்டி முடிவுத்திகதி 15.05.2012
* விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

"தென்றல்"
குறுக்கெழுத்துப் போட்டி இல.05,
44/1. மைலம்பா கல்முனை வீதி, கல்லடி,
மட்டக்களப்பு.

**குறுக்கெழுத்துப் போட்டி - 07**
**இற்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | 2 தி | | 3 க | 4 தை | | 5 ஆ | 6 சை |
| 7 வை | க | 8 ஹ | | ல | | 9 ல் | தோ |
| | 10 தி | அ | 11 க | ம் | | | |
| 12 க | | | தி | | 13 நா | 14 க | 15 ம் |
| 16 த | ரு | 17 ம | ர் | | 18 க | ம் | ல |
| ர் | | ஜ | | | 19 ரி | ப | ச |
| | 20 ஊ | | 21 ந | 22 டி | க | ன் | |
| 23 அ | மை | தி | | 24 நா | ம் | | 25 தீ |



**"தென்றல்"**
**குறுக்கெழுத்துப் போட்டி**
**இல. - 07 இல்**
**வெற்றி பெற்றோர்**

**முதலாம் இடம்**
A.டினேஸ்குமார்
பதியத்தலாவ
அம்பாறை.

**இரண்டாம் இடம்**
ச.சர்வேசன்
வாகரையார் வீதி,
கருதாவளை.

**மூன்றாம் இடம்**
திருமதி.க.செல்வநாயகம்
டச்பார், கல்லடி.

**பாராட்டுப் பெறுவோர்**
* திருமதி.லோ.மேகராசா கிராங்குளம்.
* J.அருளப்பு டச்பார், மட்டக்களப்பு.
* ரி.இன்பராசா குருமன்காடு, வவுனியா.
* இரா.நாகராசா கண்டி.
* திருமதி.டி.நிசாந்தன் ப.நோ.கூ.சங்கம், வவுணதீவு.






Dr.K.,அருளானந்தம் (MBBS, D,F,M) விரிவுரையாளர்
சௌக்கியபராமரிப்பு கற்கைகள் பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம் -

## குழந்தையின் முதல் நாள்.....

முதல் நாளில் தனது புனிதமான காற்றறைக்குள் ஒட்சிசனை உட்கொண்டு சுவாசத்தை ஆரம்பித்த குழந்தை தனது ஏனைய நடவடிக்கைகளை உலகிற்கு வெளிக்காட்டத் தொடங்குகிறது. தரைக்கு சமாந்தரமாக கிடந்து கொண்டே தன் வாழ்வை ஆரம்பிக்கிறது. புலன் அங்கங்களை மிகவும் விசித்திரமாகப் பிரயோகிப்பதன் மூலம் தனது தேவைகளைக் கச்சிதமாக நிறைவேற்றுகிறது. அழுகை என்பது குழந்தையின் மிகப்பெரிய அழைப்பு! காரணம் தன்னால் தன் தேவைகளை நிறைவேற்ற முடியாமலும் மற்றவர்களைத் தன் பக்கம் ஈர்ப்பதற்காகவும் செய்கின்ற நற்காரியமாகும். குழந்தை அழுதவுடன் பெற்ற தாயின் உடல், உளம் என்பன உடனே உதறத் தொடங்கும். உறவினர் உளாரவைவர். உறவுகள் உற்று நோக்கும்.

இந்நிலையில் தாதியர் உடன் வருவர். வைத்தியரும் வந்து சேர்வார். காரணம் குழந்தைக்கு மட்டும் தான் தெரியும். தன்னினில் தனக்கு உடலில் தேவையா? உணர்வில் தேவையா? உளவில் தேவையா? என்பது புதிராகவே இருக்கும். தாய் தன்னை அணைத்தவுடன் கண்ணயர்ந்து தூங்கி விடும். விடை தெரியா வினாக்கள் எல்லாம் தொண்டைக்குள் அடங்கிவிடும்.

குழந்தை மீண்டும் ஒருமுறை அழுகிறது. இந்நிலையில் தாய் உடனே அரவணைத்தும் அழுகை நிற்கவில்லை. தாய் தனது பாலைக் கொடுத்தாலும் குழந்தை மறுக்கிறது. காரணம் குழந்தை ஏதோ ஒரு செய்தியைத் தாய்க்குச் சொல்கிறது. இப்பிரச்சினை, சிறுநீர் கழிப்பதாகவோ, மலம் கழிப்பதாகவோ இருக்கலாம். குழந்தையின் அழுகைக்குக் காரணம் சலம் கழிப்பாக இருக்குமானால் உடலைச்சுத்தம் செய்த பின்னர் குழந்தை உறங்குகிறது.

மேற்குறிப்பிட்ட விடயங்களை நாங்கள் புரிந்து கொள்வதில் தான், சமூகத்தின் தேவைகளை உணரமுடிகிறது. குழந்தை இயற்கையின் தேவைகளை இயல்பாகவே அறிந்து கொள்ளும். காரணம் உடலின் அமைப்பு மிகவும் நுண்ணியதாகவும், அதிசயிக்கத்தக்க வகையிலும் இன்றைய விஞ்ஞான உலகத்தைப் பலமுறை சிந்திக்க வைக்கும் அளவுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பாக உள்ளது.

கலங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இழையங்களாகி, சிறப்பான இழையங்கள் உறுப்புக்களாகி, உறுப்புக்கள் ஒன்றிணைந்து தொகுதிகளாகி, தொகுதிகள் ஒவ்வொன்றும் ஒத்துழைப்பதன் மூலம் மனித உடம்பு ஒன்றாக இயங்குகிறது.

நிலத்திற்குச் சமாந்தரமாக கிடக்கும் குழந்தை அதே நிலையைத் தொடர விரும்புவதில்லை. தான் – தனக்குள்ளும், தனக்கு வெளியேயும், அசையத் தொடங்குகிறது. உணவு முறை, உறங்கும் முறை, உடையின் தன்மை என்பன மாறுபடத் தொடங்குகிறது. பிறந்த முதல் நாளில் 22 மணித்தியாலங்கள் உறங்கிய குழந்தை படிப்படியாக உறக்கத்தைக் குறைக்கத் தொடங்குகிறது.

இவ்வேளையில் குழந்தையின் உடலின் நிறையும், உடலின் நீளமும் சீரான முறையில் அதிகரிக்கிறது. குழந்தையும் தன் உணர்வுகளை வெளிக்காட்டத் தொடங்குகிறது. அன்னையைப் பார்த்து அன்பாய் புன்முறுவலை வெளியிடுகிறது.

## பொருளாதார நிலை

குழந்தையின் குடும்பத்தின் சமூகப் பொருளாதார நிலைகளுக்கேற்ப தனது புறச்சூழல் மாற்றமடையத் தொடங்குகிறது. தான் படுத்துறங்கும் படுக்கை விரிப்பிலிருந்து தான் பார்க்கும் அனைத்து புறநிலைகளும் வேறுபடத் தொடங்குகிறது. பொருளாதார நிலை குறைந்த குடும்பத்தின் குழந்தை சீலைப்படுக்கையிலும், பொருளாதாரம் மிகுந்த குடும்ப குழந்தை பஞ்சு மெத்தையிலும் உறங்கத் தொடங்குகிறது. செல்லப் பெயர்களும், அன்பு வார்த்தைகளும், இலக்கணம் இல்லாச் சொற்களும் குழந்தைக்கு எல்லோராலும் சூட்டப்படுகிறது.

## கலாசாரப்பண்புகள்

இங்குதான் சமூகத்தின் கலாசாரப்பண்புகள் பேணத் தொடங்குகின்றன. பொட்டு வைப்பதிலோ, உடை அணிவிப்பதிலோ, பெயர் சொல்லி அழைப்பதிலோ கலாசாரப் பண்புகளின் அடிப்படையில் குழந்தை மாற்றத்துக்குள்ளாகிறது. இது சமூகத்துக்குச் சமூகம் வேறுபடுகிறது. ஆனால் குழந்தையின் அடிநிலை பெரிதாக மாறுவதில்லை. குழந்தையின் உணவுத் தேவை பாலாகவே இருக்கிறது.

தனித்துவமான நோய்க்கிருமிகள் அற்ற உடலுக்கேற்ற வெப்பம் கொண்ட நோய் எதிர்ப்பு சக்தி கூடிய பைக்கற்றுக்களில் அடைக்கப்படாத வெளியிலே தயாரிக்கப்படாத உன்னதமான தாய்ப்பால் தாயின் முலையிலிருந்து குழந்தைக்கு இயற்கையாகக் கிடைக்கிறது.

தாய்ப்பால் - பாலாகப் பாற்சுரப்பியில் இல்லை. குழந்தை குடிக்கும் பொழுது தான் பால் சுரக்கப்படுகிறது. குழந்தையின் தேவைக்கேற்ப - வளர்ச்சிக்கேற்ப சுரக்கும் பாலின் தன்மை மாறுபடுகிறது. தாய் தன் உணவைப் பாலாக்குகிறாள்.


- தொடரும் -





# விலங்குகளின் விநோதம்

- கி.டானியல் -









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தென்றல்" சஞ்சிகை நடாத்தும்

## க.பொ.த (உயர்தர) பரீட்சை – 2012இல் தமிழ்பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு.

ஆசிரியர்கள் :- ச.நாகராசா, க.குணசேகரம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்)

**முதலாம் வினாவுக்கான மாதிரி வினாக்களும் விடைகளும்.**

**01. (அ.) ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "உகரம்" இதழ் குவிந்து ஒலிக்கும் சொல்
1.) பந்து 2.) வயது 3.) ஆடு 4.) கதவு 5.) பருந்து

2. பல்லிணைப் இடம்பெற்றுள்ள சொல்
1.) வெள்ளம் 2.) பத்தி 3.) சூழல் 4.) பாக்கி 5.) வெற்றி

3. 'க' கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
1.) கடன் 2.) உலகம் 3.) வேகம் 4.) பங்கம் 5.) விலங்கும்

4. பின்வருவனவற்றுள் சரிதல் ஒலி இடம்பெறும் சொல்
1.) கடல் 2.) களவி 3.) அம்மன் 4.) உழவன் 5.) சேரன்

5.) சரிதல் வெடிப்பொலி எழுத்து
1.) ப் 2.) ந் 3.) ர் 4.) ட் 5.) ந்

6.) சகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
1.) பஞ்சம் 2.) வஞ்சம் 3.) மஞ்சள் 4.) பஞ்சம் 5.) பசம்

7.) வளைநா மூக்கொலி எழுத்து
1.) ண் 2.) ல் 3.) ர் 4.) ந் 5.) ன்

8.) உடனிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்
1.) பழங்கள் 2.) பங்கம் 3.) எங்கள் 4.) கந்தல் 5.) கம்பன்

9.) பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்
1.) பட்டு 2.) நக்கு 3.) பாச்சி 4.) நெற்று 5.) அர்ச்ச

10.) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் இடம்பெற்றுள்ள சொல்
1.) ஏடு 2.) எட்டு 3.) வயது 4.) எழும்பு 5.) கதவு

11.) முற்றியலுகரம் இடம்பெற்றுள்ள சொல்
1.) விறகு 2.) உறுமு 3.) நண்டு 4.) நாடு 5.) கொக்கு

12. வினாப்பொருளில் வரும் குறில் எழுத்து
1.) எ 2.) யா 3.) ஆ 4.) ஓ 5.) ஏ





13. 'எடுப்பதூஉம் எல்லாம் மழை' இதில் இடம்பெற்றுள்ள அளபெடை
1.) ஒற்றளபெடை 2.) இன்னிசை அளபெடை 3.) சொல்லிசை அளபெடை
4.) முன்னிசை அளபெடை 5.) செய்யுளிசை அளபெடை

14. வெள்ளிக்கிழமை என்பதில் வந்துள்ள 'வெ' என்பது
1.) இதழொலி 2.) உதட்டுப்பல்லொலி 3.) மூக்கொலி 4.) அண்ண ஒலி
5.) வளைநா ஒலி

15. தமிழ் இலக்கணப்படி மொழிக்கு இறுதியில் இடம்பெறாத எழுத்துத்தொகுதி.
1.) ண்,ன்,ம் 2.) ழ்,ய்,ர் 3.) ந்,ப்,த்,க் 4.) ழ்,ல்,ள்,ன் 5.) ஞ்,வ்,ந்

16. நன்னூலின்படி பன்னிரண்டு உயிர்களுடனும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் சொல்லின் மெய்கள்.
1.) ண்,ன் 2.) ஞ்,ந் 3.) க்,ப் 4.) ங்,ம் 5.) வ்,ய்

17. விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெறத்தவறிய இம்மாணவர்கள் தம்மில் எவ்வித தவறும் இல்லை எனக்கூறினர். இதில் புறச்சுட்டுச் சொல்.
1.) தவறு 2.) இம் 3.) தம்மில் 4.) இம்மாணவர்கள் 5.) கூறினர்.

18. "உன் அம்மாவா இப்படிச் செய்யச் சொன்னார்?" இதில் வினா எழுத்தை ஏற்று வந்த சொல்
1.) அம்மாவா 2.) இப்படி 3.) செய்ய 4.) உன் 5.) சொன்னார்

19. மாலையும் வந்தது என்பதில் மாலையும் என்ற சொல்லின் மாத்திரை அளவு
1.) 4¼ 2.) 4½ 3.) 5¼ 4.) 5 ½ 5.) 5

20. அரையுயிர் எழுத்து இடம்பெற்றுள்ள சொல்
1.) வாகல் 2.) பகல் 3.) நகல் 4.) அகல் 5.) புகல்

21. உயர்திணை இருபாற் பொதுப்பெயர்
1.) தோழி 2.) அதிபர் 3.) ஆசிரியை 4.) மாணவன் 5.) மன்னன்

22. காரணச் சிறப்புப்பெயர்
1.) மைனா 2.) பறவை 3.) மண்வெட்டி 4.) யானை 5.) அரிவாள்

23. நேற்று அச்செய்தியைச் சொன்னவன் இவன்தான் இதில் சொன்னவன் என்பது.
1.) தொழிற்பெயர் 2.) ஆக்கப்பெயர் 3.) ஆகுபெயர்
4.) வினையாலணையும் பெயர் 5.) சிறப்புப்பெயர்

24.) பெயரும் வினையும் சேர்ந்து கூட்டுப்பெயர்
1.) தலைக்கவசம் 2.) தலைமுடி 3.) தலைப்பிடி 4.) தலைமயிர் 5.) தலைப்பு

25.) ஆகுபெயருக்கு உதாரணமாகக் கொள்ளத்தக்கது.
1.) அலங்காரம் கற்றான் 2.) திருவாசகம் ஓதினான் 3.) இளநீர் வெட்டினான்
4.) பாடம் படித்தான் 5.) கார் அறுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.) குணாளன் நேற்று அவரைச் சந்தித்திருந்தால் இன்று பாடசாலைக்கு வந்திருக்கமாட்டான் என்று அதிபர் கூறினார். இதில் மாற்றுப்பெயர்.
1.) குணாளன் 2.) பாடசாலை 3.) அதிபர் 4.) அவர் 5.) இன்று

27.) நன்னூலின் கூறப்பட்டபடி மொழி இறுதியில் வரும் எழுத்துக்களின் எண்ணிக்கை.
1.) 12 2.) 30 3.) 24 4.) 22 5.) 21

28.) அரை மாத்திரை பெறும் சார்பெழுத்து
1.) ஐகாரக்குறுக்கம் 2.) மகரக்குறுக்கம் 3.) ஆய்தக்குறுக்கம்
4.) முற்றாய்தம் 5.) ஔகாரக்குறுக்கம்

29.) எச்சமாகவும் முற்றாகவும் வரத்தக்க சொல்
1.) இருந்து 2.) ஆடிய 3.) பாட்டு 4.) உண்டான் 5.) ஓடும்

30. பணிப்பாளர் நாளை அவருக்கு வர வசதியில்லை என்றார். இதில் பொருள் மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்.
1.) பணிப்பாளர் 2.) அவர் 3.) நாள் 4.) வரவு 5.) வசதி

31. பிழையாக எழுத்துக்கூட்டப்பட்டுள்ள சொல்.
1.) இலச்சினை 2.) இலட்சனை 3.) முயற்சி 4.) ஆராய்ச்சி 5.) உற்பத்தி

32. உலக நடையறிந்து ஒழுகுதல் என்பதனைக் குறிக்கும் தனிச்சொல்.
1.) அறிவுடைமை 2.) ஒழுக்கமுடைமை 3.) ஒப்புரவு 4.) பண்புடைமை
5.) ஆழமுடைமை.

33.)சுகந்தன் தன் தந்தைக்கு நேற்றுத் தந்தியடித்தான். தந்தியடி என்பது
1.) ஏவல்வினை 2.) துணைவினை 3.) தன்வினை 4.) பிறவினை 5.) கூட்டுவினை

34.) சுகந்தி தொடர் முயற்சியினால் பரீட்சையில் சிறப்புச்சித்தி பெற்றாள். இவ்வாக்கியத்தில் ஆல் என்னும் உருபு தரும் வேற்றுமைப்பொருள்.
1.) கொடை 2.) கருத்தா 3.) கருவி 4.) உடன்நிகழ்ச்சி 5.) காரணம்

35. இடப்பொருளில் வரும் வேற்றுமை உருபு
1.) ஐ 2.) ஆது 3.) உள் 4.) இன் 5.) ஆன்

36. சுகந்தன் தூணைச் சார்ந்தான். இதில் இடம்பெற்றுள்ளது.
1.) உருபு மயக்கம் 2.) பொருள் மயக்கம் 3.) பால் மயக்கம் 4.) திணைமயக்கம்
5.) இடமயக்கம்

37. பின்வருவனவற்றுள் செயற்படுபொருளை உணர்த்தப்பயன்படும் இடைச்சொல்.
1.) அது 2.) இன் 3.) இல் 4.) ஐ 5.) கண்

38. சொல்லுருபு இல்லாத வேற்றுமைகள்
1.) ஒன்றும் மூன்றும் 2.) இரண்டும் ஏழும் 3.) நான்கும் ஐந்தும்
4.) நான்கும் ஆறும் 5.) மூன்றும் ஐந்தும்





39. பின்வருவனவற்றுள் உடம்படுமெய் இடம்பெறாத சொல்
1.) பனையோலை 2.) தென்னோலை 3.) வாழையிலை 4.) பலாவிலை
5.) மாவிலை

40. செத்தான் என்பதில் விகாரப்பட்ட உறுப்பு.
1.) விகுதி 2.) இடைநிலை 3.) பகுதி 4.) சந்தி 5.) சாரியை

41. வந்தான் என்ற சொல்லின் சரியான சந்தி பிரிப்பு.
1.) வந்+த்+ஆன் 2.) வ+த்+ஆன் 3.) வா+த்+த்+ஆன் 4.) வா+த்+ந்+ஆன்
5.) வா+ந்+ந்+ஆன்

42. பின்வருவனவற்றுள் எதிர்மறை இடைநிலை இடம்பெற்றுள்ள சொல்.
1.) படித்தான் 2.) படிப்பான் 3.) படித்திலன் 4.) படிக்கிறான் 5.) படிக்கின்றான்.

43.) நின்றான் என்பதில் காலம் காட்டும் இடைநிலை
1.) ற் 2.) ற்ற் 3.) ஆன் 4.) நில் 5.) ன்ற்

44. இதனால் என்பதில் வந்துள்ள சாரியை
1.) இது 2.) அதன் 3.) ஆல் 4.) அன் 5.) இன்

45. இயல்புப் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக அமைவது
1. கடற்கரை 2.) கடலோரம் 3.) விறகுக்கட்டு 4.) பலாவிலை 5.) வாழையிலை

46. ஆதி நீளலுக்கு எடுத்துக்காட்டாக அமையத்தக்க சொல்
1.) பாசிலை 2.) வந்தான் 3.) பலாவிலை 4.) பலாப்பழம் 5.) தோற்பை

47. முதல் குறுகுதலுக்கு எடுத்துக்காட்டாக அமையத்தக்க சொல்
1.) பைந்தார் 2.) கண்டான் 3.) உண்டான் 4.) மாவிலை 5.) மலைக்கோயில்

48. அம்சாரியை தோன்றிப்புணர்ந்த சொல்.
1.) மாங்காய் 2.) தோடங்காய் 3.) மாம்பழம் 4.) பலாக்காய் 5.) கண்ணன்

49. மூன்று விகாரங்களும் பெற்றுப் புணர்ந்த சொல்
1. வாழைக்காய் 2.) மாதுளங்காய் 3.) மாதுளம்பழம் 4.) சாளரம் 5.) மாதுளம்பூ

50. எச்செயல் நல்லதென அவள் நினைக்கின்றாளோ அதை அன்றே செய்து விடுவாள். இதில் இடம்பெற்றுள்ள செயற்படுபொருள்
1.) செய்து 2.) நல்லது 3.) நினைப்பு 4.) அது 5.) அன்று

51. அன்னமும் துயர்க்கடல் அடிவைத்தாளரோ? இதில் துயர்க்கடல் என்பது
1.) உவமையணி 2.) உருவக அணி 3.) உயர்வு நவிற்சியணி
4) தற்குறிப்பேற்றவணி 5.) சிலேடையணி

52. ஆலயம் தொழுவது சாலவும் நன்று. இதில் சால என்பது
1.) பெயர்ச்சொல் 2.) வினைச்சொல் 3.) உரிச்சொல்
4.) இடைச்சொல் 5.) திசைச்சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. பாம்பு பாம்பு என்பது
1.) அடுக்குத்தொடர் 2.) இணைமொழித்தொடர் 3.) உரிச்சொற்றொடர்
4.) பெயரெச்சத்தொடர் 5.) வினைமுற்றுத்தொடர்

54.பின்வருவனவற்றுள் கூட்டெழுத்துக்கள்
1.) அ,இ 2.) உ,ஏ 3.) ஊ,ஆ 4.) ஈ,எ 5.) ஐ,ஔ

55. வல்லின மெய்யெழுத்துக்களின் பிறப்பிடம்
1.) தொண்டை 2.) மூக்கு 3.) வயிறு 4.) மார்பு 5.) அதரம்

56.பின்வருவனவற்றுள் கீழ் உயிர் எழுத்துக்கள்
1.) இ,ஈ 2.) உ,ஊ 3.) எ,ஏ 4.) ஒ,உ 5.) அ,ஆ

57.வளைநா மருங்கொலி எழுத்துக்கள்
1.) ள்,ழ் 2.) ண்,ட் 3.) ங்,க் 4.) ஞ்,ச் 5.) ய்,வ்

58. வாய்க்குள் காற்றைத் தடை செய்யாமல் காற்றை மூக்கினால் வெளிவிடும் போது பிறப்பது.
1.) மருங்கொலி 2.) மூக்கொலி 3.) வெடிப்பொலி 4.) ஆடொலி 5.) வருடொலி

59.அ,ஆ,எ,ஒ என்னும் நான்கு உயிரோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் எழுத்து
1.) ஞ் 2.) ங் 3.) வ் 4.) ல் 5.) ய்

60. தமிழ் இலக்கணப்படி மொழி இறுதியில் வரமாட்டாத எழுத்துத் தொகுதி
1.) ஞ்,ண்,ல் 2.) ண்,ய்,ர் 3.) ட்,த்,ற் 4.) வ்,ழ்,ள் 5.) ந்,ம்,ன்

61. உடனிலை மெய்மயக்கமாக வரமாட்டாத எழுத்துக்கள்
1.) த்,க் 2.) ந்,ச் 3.) ஞ்,ண் 4.) ல்,ள் 5.) ர்,ழ்

62. சொற்களில் மூன்று மெய்கள் மயங்கி வரும் சந்தர்ப்பங்களில் முதலில் வரும் மெய்யெழுத்துக்கள்.
1.) ய்,ர்,ழ் 2.) ங்,ஞ்,ண் 3.) ம்,ள்,ல் 4.) ன்,ம்,ஞ் 5.)க்,ப்,ம்

63. இருதிணை மூவிடப் பொதுப்பெயர்
1.) ஒருவர் 2.) எல்லாம் 3.)பேதை 4.)மடந்தை 5.)தோன்றல்

64. முதனிலைத் தொழிற்பெயர்
1.)குடை 2.) ஊர் 3.) கட்டு 4.) ஊழி 5.) வா

65. மாணவர்கள் யாராவது இதற்கு மறுமொழி கூறலாம். இதில் யாராவது என்பது
1.)தன்மைப்பெயர் 2.) வினாப்பெயர் 3.) சுட்டுப்பெயர்
4.) ஆகுபெயர் 5.) பிரதியீட்டுப்பெயர்





66. தோட்டத்தில் உருளைக்கிழங்கு போட்டிருக்கின்றேன். இங்கு உருளைக்கிழங்கு என்பது
1.) பொருளாகுபெயர் 2.) சினையாகுபெயர் 3.) காலவாகுபெயர்
4.) விட்டலாகுபெயர் 5.) இருமடியாகுபெயர்

67.முதனிலை திரிந்த தொழிற்பெயர்
1.) போ 2.) செல் 3.) கா 4.) பாடு 5.) பேறு

68. உடன்நிகழ்ச்சிப் பொருளில் வரும் வேற்றுமை உருபுகள்
1.) ஆல், ஆன் 2.) அது, ஆது 3.) கண்,உள் 4.) ஒடு,ஓடு 5.) ஐ,கு

69. "ம்" என்னும் மெய்யை இறுதியாகக் கொண்ட பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்கும் போது பெறும் சாரியை
1.) அத்து 2.) இற்று 3.) இன் 4.) அன் 5.) மற்று

70. தூணிற் சார்ந்தான் என்பதில்..... இடம்பெற்றுள்ளது.
1.) திணைமயக்கம் 2.) பால்மயக்கம் 3.) உருபு மயக்கம்
4.) பொருள்மயக்கம் 5.) எண்மயக்கம்

71. பின்வருவனவற்றுள் வினைப்பகாப்பதம்
1.) வீடு 2.) வா 3.) கொல் 4.) உறு 5.) ஏடு

72. பகுபத உறுப்புக்களில் திணை, பால், எண், இடம் உணர்த்துவது
1.) பகுதி 2.) சந்தி 3.) விகுதி 4.) சாரியை 5.) விகாரம்

73. தொழிற் பெயர் விகுதிகள்
1.) து,அ 2.) இ,மின் 3.) ய்,றி 4.) தல்,அல் 5.)அ,சு

74. எதிர்மறை இடைநிலைகள்
1.) ச்,ஞ் 2.) கின்று, கிறு 3.) ப்,வ் 4.) த்,இன் 5.) இல்,அல்

75. போன்றான் என்பதன் பகுதி போல் இது
1.) பெயர்ச்சொல் 2.) வினைச்சொல் 3.) இடைச்சொல்
4.) உரிச்சொல் 5.) வடசொல்

76. எல்லாவற்றையும் என்பதில் அற்று என்பது
1.) இடைநிலை 2.) சந்தி 3.) சாரியை 4.) விகுதி 5.) விகாரம்

77. பின்வருவனவற்றுள் பெயரெச்ச விகுதிகள்
1.) இ,இல் 2.) ஆன்,ஆன் 3.) து,மல் 4.) அ,உம் 5.) ஆ,ஆத்

78.பின்வருவனவற்றுள் வினையெச்ச விகுதிகள்
1.) க, இய 2.) அள்,ஆள் 3.) உ,இ 4.) எல்,ஏல் 5.)ப,மார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ஆ.) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கவிடை எழுதுக.**

1.) முன்னிலைப் பெயர்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவை வேற்றுமை ஏற்கும் போது அடையும் மாற்றங்களை விளக்குக.
**விடை** :- நீ, நீங்கள் முதலியன முன்னிலைப்பெயர்கள். இவை நேரடியாக வேற்றுமை உருபு ஏற்கமாட்டாதவை. இவை வேற்றுமை உருபு ஏற்பதாயின் நீ என்பது உன் என்றும் நீங்கள் என்பது உங்கள் என்றும் மாற்றமடைய வேண்டும். **(உ+ம்)** உன் + ஐ = உன்னை
உங்கள் + ஐ = உங்களை

2.) குற்றியலுகரம் என்றால் என்ன? குற்றியலிகரம் என்றால் என்ன? ஒவ்வோர் உதாரணம் எழுதுக.
**விடை** :- குற்றியலுகரம் :- தனிக்குற்றெழுத்தல்லாத ஏனைய எழுத்துக்களின் பின்னே வல்லின மெய்யின்மேல் சொல்லினிறுதியில் ஏறிநிற்கும் உகரம் தனக்குரிய மாத்திரையை விட்டுக்குறைந்தொலித்தல் குற்றியலுகரம் எனப்படும்.
**(உ+ம்)** பட்டு

குற்றியலிகரம் : குற்றியலுகரச் சொல்லோடு யகரம் வந்து சேரும்போது உகரம் இகரமாகத் திரிதல் குற்றியலிகரம் எனப்படும்.
**(உ+ம்)** பட்டு+யாது = பட்டியாது.

3.) வேற்றுமைத் தொகை என்றால் என்ன? என்பதை விளக்கி மூன்றாம் வேற்றுமைத் தொகைக்கு உதாரணம் ஒன்று எழுதுக.
**விடை** : இரண்டாம் வேற்றுமை தொடக்கம் ஏழாம் வேற்றுமை வரையுள்ள உருபுகளில் ஏதாவது இடையில் மறைந்து நிற்கச் சொல்லோடு சொல் தொடர்வது வேற்றுமைத் தொகை எனப்படும். (**(உ+ம்)** கல் எறிந்தான் (வேற்றுமைத் தொகை) கல்லால் எறிந்தான் (வேற்றுமை விரி அல்லது வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்)

4.) செயற்படுபொருள் குன்றியவினை, செயற்படுபொருள் குன்றாதவினை என்பவற்றை விளக்கி ஒவ்வோர் உதாரணம் எழுதுக.
**விடை** :- செயற்படுபொருளை வேண்டாது நிற்கும் வினை செயற்படுபொருள் குன்றிய வினையாகும். **(உ+ம்)** வந்தான். இதில் வந்தான் என்பது வினைமுற்று செயற்படுபொருளைக் காண்பதற்கு எதை வந்தான் என வினவின் விடைபெற முடியாது. எனவே செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருளை வேண்டி நிற்கும் வினை செயப்படுபொருள் குன்றாத வினை எனப்படும். **(உ+ம்)** படித்தான். இங்கு எதைப்படித்தான் என வினவின் பாடத்தை என்பது விடையாக வரும். எனவே செயப்படுபொருள் பாடம் என்பதாகும்.

5.) செய்வினை, செயப்பாட்டுவினை என்பவற்றை விளக்கி உதாரணமும் எழுதுக.
**விடை** :- படுவிகுதி புணராத முதனிலை அடியாகத் தோன்றிய வினை செய்வினை எனப்படும். **(உ+ம்)** கண்ணன் பாடம் படித்தான். படுவிகுதி





படுவிகுதி புணர்ந்த முதனிலை அடியாகத் தோன்றியவினை செயப்பாட்டுவினை எனப்படும்.
**(உ+ம்)** கண்ணனால் பாடம் படிக்கப்பட்டது. இங்கு செய்வினையில் வரும் எழுவாய் செயப்பாட்டுவினையில் மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவாகவும் செயப்படுபொருள் எழுவாயாகவும் வரும்.

6.) இல் உருபு நீங்கல் பொருளிலும் இடப்பொருளிலும் வருவதற்கு எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிட்டு எத்தனையாம் வேற்றுமை என்பதனையும் குறிப்பிடுக.
**விடை** :- கண்ணன் ஊரில் நீங்கினான், நீங்கல் பொருள் - ஐந்தாம் வேற்றுமை நான் பாடசாலையில் அவளைச் சந்தித்தேன் - இடப்பொருள் ஏழாம் வேற்றுமை

7.) பகுபத உறுப்புக்கள் ஆறும் இடம்பெறத்தக்க சொல் ஒன்றைக் குறிப்பிட்டு பகுத்துப் பெயரிடுக.
**விடை** : கடந்தனன்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கட | + (ந்) | த் | + | த் | + | அன் | + | அன் |
| பகுதி | | சந்தி | | இ.நிலை | | சாரியை | | விகுதி |

சந்தியால் வந்த தகர வல்லொற்று நகர மெல்லொற்றாக விகாரமடைந்தது.

8.) உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பவற்றைச் சுருக்கமாக விளக்கி ஒவ்வோர் உதாரணம் எழுதுக.

**விடை** : சொல்லின் இடையில் ஒரு மெய்யெழுத்தை அடுத்து அதே மெய்யெழுத்து மயங்கிவருவது (இரட்டித்து வருவது) உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும். **(உ+ம்)** அப்பம் (ப்ப்) சொல்லின் இடையில் மெய்யெழுத்தொன்றை அடுத்து அந்த மெய்யல்லாத வேறு மெய்யெழுத்து மயங்கி (இணைந்து) வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும் **(உ+ம்)** கற்பு (ற்ப்)

9.) இரு பெயரொட்டுப் பண்புத்தொகை என்றால் என்ன? என்பதை விளக்கி உதாரணமும் எழுதுக.
**விடை** :- ஆகிய, ஆன என்ற பண்புருபுகள் கெட்டு நிற்கச் சிறப்புப் பெயரோடு பொதுப்பெயராயினும் பொதுப்பெயரோடு சிறப்புப்பெயராயினும் தொடர்ந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.
**(உ+ம்)** சாரைப்பாம்பு (சிறப்பு + பொது) ஆசிரியனகத்தியன் (பொது+சிறப்பு) இவை விரியுமிடத்து சாரையாகிய பாம்பு, அசிரியனாகிய அகத்தியன் (ஆசிரியனான அகத்தியன்) என வரும்.

10.) ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன? விளக்கி உதாரணம் எழுதுக.
**விடை** :- ஐகாரம் தன்னை விளிக்கும் போது இரண்டு மாத்திரை அளவில் ஒலிக்கும். ஆனால் சொற்களில் இடம்பெறும் போது முதல், இடை, கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய மூன்று இடங்களிலும் தனக்குரிய மாத்திரையை விட்டுக்குறைந் தொலிக்கும் இதனை ஐகாரக்குறுக்கம் என்பர்.

**(உ+ம்)** ஐயர் (மொழி முதல்) வளையல் (மொழியிடை) குவளை (மொழி இறுதி)

11.) பொருளாகுபெயர், சினையாகுபெயர் என்பவற்றை விளக்கி ஒவ்வோர் உதாரணம் எழுதுக.

**விடை :- (உ+ம்)** மல்லிகை சூடினாள். இங்கு முதற்பொருளாகிய மல்லிகை அதன் சினைப்பெயராகிய பூவுக்கு ஆகி வந்துள்ளது. எனவே இது பொருளாகுபெயர் அல்லது முதலாகுபெயர். வெற்றிலை நட்டான் எனும் போது வெற்றிலை என்னும் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆகி வந்துள்ளது. எனவே இது சினையாகுபெயர்.

12.) உருபும் பொருளும் உடன்தொக்க தொகை என்றால் என்ன? உதாரணம் குறிப்பிட்டு விளக்குக.

**முதலாம் பகுதி விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 - 4 | 11 - 2 | 21 - 2 | 31 - 2 | 41 - 3 |
| 2 - 2 | 12 - 1 | 22 - 1 | 32 - 4 | 42 - 3 |
| 3 - 1 | 13 - 2 | 23 - 4 | 33 - 5 | 43 - 1 |
| 4 - 3 | 14 - 2 | 24 - 3 | 34 - 5 | 44 - 4 |
| 5 - 3 | 15 - 3 | 25 - 3 | 35 - 3 | 45 - 2 |
| 6 - 5 | 16 - 3 | 26 - 4 | 36 - 2 | 46 - 1 |
| 7 - 1 | 17 - 4 | 27 - 3 | 37 - 4 | 47 - 2 |
| 8 - 2 | 18 - 1 | 28 - 4 | 38 - 2 | 48 - 2 |
| 9 - 3 | 19 - 1 | 29 - 5 | 39 - 2 | 49 - 2 |
| 10 - 3 | 20 - 1 | 30 - 2 | 40 - 3 | 50 - 4 |

| | | |
|---|---|---|
| 51 - 2 | 61 - 5 | 71 - 2 |
| 52 - 3 | 62 - 1 | 72 - 3 |
| 53 - 1 | 63 - 2 | 73 - 4 |
| 54 - 5 | 64 - 3 | 74 - 5 |
| 55 - 4 | 65 - 5 | 75 - 3 |
| 56 - 5 | 66 - 2 | 76 - 3 |
| 57 - 1 | 67 - 5 | 77 - 4 |
| 58 - 2 | 68 - 4 | 78 - 3 |
| 59 - 1 | 69 - 1 | |
| 60 - 3 | 70 - 4 | |

நூலகம்




வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தமிழ் - சிங்கள புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!




**All Kinds of Laptops Available for Lowest Price**



TOSHIBA
IBM
acer
Gateway
FUJITSU
lenovo
SAGER
SONY
Mac
ALIENWARE
DELL
COMPAQ
SONY VAIO

**IT Solution**

AD/0003

இல.233, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி - 065-2224857, 071-3434634
ஈ.மெயில்- itsolutionsl@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு தமிழ்ச் சங்கம்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தமிழ் – சிங்களப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

நூலகம்

HDFC BANK

# HDFC வங்கி

உங்கள் வீடமைப்பு வங்கி

# GOLD LOAN

# அடகுக் கடன் சேவை

**எமது வாடிக்கையாளர் நலன் கருதி.......**

தற்போது தங்க நகை அடகுக்கடன் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

- குறைந்த வட்டி.
- பாதுகாப்புத் தன்மை.
- நம்பகரமான துரித சேவை.

AD/0032

**HDFC வங்கி**
பெயிலி வீதி, அரசடி, மட்டக்களப்பு.
தொ.பே. : 065 2222792, 065 2227573

வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org